பொன்னி



வள்ளுவரும் பெரியாரும்

திருக்குறள் முனிசாமி

திராவிடப் பெருமக்களுக்கோர் சிறந்த ஆராய்ச்சி நூல். எளியநடையில், இன்பத் தமிழில் ஆற்றொழுக்குப்போக்கில் எழுதப்பட்டுள்ளது.

தமிழ்ப்பேராசிரியர் நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் எம். ஏ., பி. எல்., அவர்கள் போற்றிப் புகழ்ந்து பாராட்டும் மதிப்புரையுடன் வெளிவந்துள்ளது. 'நான் படித்து மகிழ்வதுபோல, அனைவரும் இதனைப் படித்து மகிழ்வார்கள்' என்று பாரதியார் குறிப்பிட்டுள்ளார்.

திராவிடப் பெரியார் ஈ. வே. ராமசாமி அவர்களின் தனிச் சிறப்பும் தன் மதிப்பும் கொண்ட வாழ்க்கையில் வள்ளுவனாரின் குறளறங்களைப் பதியவைத்து ஆசிரியர் நயமுடனும், கவர்ச்சியுடனும் விளக்குகின்றார். புத்தம் புதிய முறையில் கருத்துக்களைக் கோர்த்தமைத்துத் தமிழகத்திற்களிக்கப்பட்டுள்ள இந்நூல் ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டியது மிக மிக அவசியமானதாகும். அழகிய ஆர்ட் அட்டையுடனும் பெரியார் படத்துடனும் கூடியது.

விலை அணா எட்டு

தபாற்செலவு அணா ஒன்று

செந்தமிழ்ப் பதிப்பகம்

த. பெ. 39 — புதுக்கோட்டை

பொன்னி

பொருளடக்கம்

ஆசிரியர்:-
முருகு சுப்பிரமணியன்

பாரதிப் பித்தன்
நக்கீரன்
சாமி பழனியப்பன்
வெ. குருசாமி
'மன்னன்'
புத்தனேரி ரா. நடராஜன்
கு. திரவியம்
அறிஞர் அப்பாத்துரை
டி. கே. சினிவாசன்.
மு. அண்ணாமலை
"ஊசி"
ரா. நீலமேகம்
'அத்தான்'
'தமிழரசி'
நா. வேத்தரசன்

ஆகியோரின் எழுத்தோவியங்கள்

மலர் 2 : : திருவள்ளுவர் ஆண்டு 1979 : : விலை அ

இதழ் 5 : : ஆனித்திங்கள் 2-ம் நாள் : : 15—6—

எவர் பாட்டன் சொத்து?

பாரதியின் பாட்டெவர்தம் பாட்டன் சொத்து?
பாட்டாளி மக்கள்தமைப் பல்லாண்டாகக்
கூரியவெம் பற்களினல் கிழித்து ரத்தம்
குடித்துடலம் கொழுத்தபெரும் பணப்பூதத்தின்
வாரிசுக்கோ தனியுரிமை? வேற்றுநாட்டான்
வால்பிடித்துப் பல்லிளித்துக் கைக்கூலிக்கே
சீரியதாய் நாட்டடிமை வளர்த்துவந்த
தேசத்தின் பகைவர்கட்கோ, தியாகி சொத்து?

"தனியொருவன் பசிதீர வில்லை யென்றல்
சகத்தினையோர் கணத்திலழித் திடுவோம்" என்று
தனியுடமை யனைத்தையுமே பொதுமை யாக்கும்
சமதர்ம முரசொலித்த தந்தை வைத்த
இனியகவி மணிகளையே தனத்தைக் காக்கும்
இரண்டொருவர் தனியுடைமை யென்றல், இன்று
மனிதரென்பார் எவர் பொறுப்பார்? கலைஞர் யார்தான்
மனங்கொதியார்? தமிழர்எவர் மறுத்துப் பேசார்?

'காற்றினிலே யேறிவிண்ணைச் சாடும்' வீரக்
கவிஞனுக்குத் தடைவிதிக்கும் மடமை விட்டு,
நாட்டினிலே தமிழரெனப் பிறந்தார் யாரும்
நமதுரிமைச் செல்வமெனக் கொண்டு நாளும்
போற்றிசெய, பாரதிவாக் கனைத்தும் மக்கள்
பொதுவுடைமை யாக்கிவிட வேண்டும்; இன்றேல்
பாட்டினிலே உலகாளப் பிறந்த கோவைப்
பணத்தடிமை யாக்கிவிட்ட பதர்களாவோம்!

பாரதிப்பித்தன், இலங்கை.


பொன்னி

இந்தி வேண்டாம்!

சென்ற ஆகஸ்டு பதினைந்தில் பெற்ற விடுதலை நம்மவரின் தலையிலே இந்துஸ்தானியைச் சுமத்தியிருக்கிறது. இந்திய அரசினரின் ஏவலுக்காட்பட்ட சென்னை கல்வியமைச்சர் இந்துஸ்தானி தமிழ்நாட்டுப்பள்ளியில் 'இரண்டாவது மொழியாகப் பயிலப்படவேண்டிய மொழிகளில் ஒன்று; ஆனால் கட்டாயமில்லை என்று திட்டம் தீட்டிவிட்டார். ஆனால் மற்ற சென்னை மாகிலப் பகுதிகளான கேரளம், ஆந்திரம், கர்நாடக மண்டலங்களில் இரண்டாவது மொழி அதாவது இந்துஸ்தானி கட்டாயபாடமாக இருக்குமாம். 'ஏனோ இந்த வேறுபாடு? கூடாது. அஞ்சாதிர் கல்வியமைச்சரே!' என்று தமிழ்நாட்டுக் காங்கிரஸ் ஏடுகள் அமைச்சருக்குத் 'தாபம்' போட்டன; விளைவு நாம் எதிர்பார்த்தபடியே இருக்கிறது.

தமிழ்நாட்டில் இந்துஸ்தானி கட்டாயமாகத் திணிக்கப்படுகின்றதென்றும் அதனால் தமிழ் வளர்ச்சி பாழ்படுகிறதென்றும் சிலர் தவறாக எண்ணுகிறார்களாம். அவர்கள் எண்ணுவது-தவறு என்று காட்டவும், தமிழ்நாட்டுக் குழந்தைகள் தாமே விரும்பி இந்துஸ்தானியைப் படிக்கின்ற காட்சியைப் படம்பிடித்து அவர்கள் முன்னே நீட்டவும்தான் இந்த ஏற்பாடாம்—இப்படியெல்லாம் உண்மைகளை அண்மையில் பத்திரிகை நிருபர்களிடத்திலே வெளிப்படுத்தியிருக்கிறார் நம் அருமைக் கல்வியமைச்சர். மேலும் தமிழ்க்குழந்தைகள் இந்துஸ்தானியைப் படித்துத் திரும்படியாகச் சர்க்கார் அலுவல் பெற, வேண்டிய தகுதிகளில் ஹிந்துஸ்தானித் தேர்ச்சியும் கவனிக்கப்பட வேண்டுமென விதிகளில் திருத்தம் செய்யப் போவதாகவும் அவர் வெளிப்படையாகத் தம் திட்டத்தைக் கூறிவிட்டார்.

"இந்துஸ்தானி படித்தால்தான் உத்தியோகம்" என்று சொல்லிவிட்டார்கள். இந்நிலையில் தமிழ்மக்கள் என்னசெய்யப் போகிறார்கள்? முன்பு ஹிந்தியைப் புறமுதுகிட்டோடச்செய்த வீர இளங்காளைகள் ஆட்சியாளர் அறைகூவலுக்கு என்ன பதில் விடுக்கப் போகிறார்கள்? கல்வியமைச்சர் கூறுகிறபடி தங்கள் தங்கள் குழந்தைகளை இந்தி பயிலும்படி செய்யப்போகிறார்களா? அல்லது 'என் பிள்ளைக்கு இந்திவேண்டாம்' என்று எழுதப்போகிறார்களா? தமிழ் மக்கள் ஒன்று சேருகின்ற வாய்ப்பினை அரசினர் ஏற்படுத்தித் தருகிறார்கள்! விழிப்பு தமிழரிடையே ஆட்சிசெய்யுமானால் இதைத்தவிர வேறு பொன்னான சந்தர்ப்பம் கிடைக்கமுடியாது. அங்கங்கே 'இந்தி வேண்டாம்' என்று எழுதும்படி பெற்றோர்களைக் கேட்டுக்கொள்ள மாபெரும் இயக்கம் தொடங்கவேண்டும். 'எந்தப் பள்ளியிலும் தமிழ்நாட்டில் இந்திபடிக்க ஒரு பிள்ளைகூட வரவில்லை' என்ற முடிவு அவ்வியக்கத்தின் விளைவாக வேண்டும். அப்படி நேர்ந்தால்தான் கல்வியமைச்சர் 'தமிழர் இந்தியை எதிர்த்தது உண்மை' என்பதை உணர்வார். இந்திக்குப் பள்ளியில் இடம் ஒதுக்கமாட்டார். தமிழ்நாட்டில் தமிழர்க்கு எவ்வகையிலும் பயன்படமுடியாத இந்திக்குத் தமிழ்மக்க



காலமும் கருத்தும்

பிரிவினை நாள்

வரும் 1-7-48 அன்று திராவிட நாடெங்கும் திராவிடநாடு பிரிவினைநாள் கொண்டாட்டம் நடைபெற விருக்கிறது. இந்நிலப் பரப்பிலே வாழ்கின்ற மக்கள் தங்கள் வாழ்வு திராவிடம் தனியரசாக மலர்வதிலேதான் அமைந்திருக்கிறது என்றெண்ணுவதைக் காட்டவே அக்கொண்டாட்டம் சென்ற ஆண்டுமுதல் நிகழ்ந்து வருகிறது. இப்பொழுது இந்தியாவை ஆளுகின்றவர்களோ இக்கோரிக்கையைப் பொறுத்தவரையில் கேளாக்காதினராகவே நடந்து வருகின்றனர். முதலமைச்சர் நேருஅவர்களும் இப்பிரச்னையை மனத்திற்கொண்டே குறுகிய மாகாணப் பித்துக்கூடாது என்றும் ஒவ்வொரு மாகாணமும் தனி நாடு போல் நடந்து கொள்கிறதே என்றும்டில்லியில்பேசியபோது குறிப்பிட்டிருக்கிறார். அவர் வெள்ளையனை எதிர்த்து வெற்றி கண்ட வீரர்; அவர் கட்சியினர் அன்று ஆண்ட வெள்ளையரை எதிர்த்தபோது, வெள்ளையர் இவர்களைப்பற்றி என்ன கூறிவார் என்பதைப் பண்டிதர் அறிவார். அறிந்தும் அதே போக்கைத் தம் போக்காக ஆக்கிக்கொண்டு பிரிந்து தனி வட்டாரம் அமைத்துக்கொள்ள விரும்பும் இன உணர்ச்சியை அவமதித்து வருகிறார். வினைவும் அவர் அறியாததல்ல. எனவே இந்த ஆண்டு திராவிடமெங்கும் நடைபெற விருக்கும் திராவிட நாட்டுப் பிரிவினைநாள் நிகழ்ச்சிகளைக் கவனித்த பின்னராவது முதலமைச்சர் நேரு தம்போக்கை மாற்றிக்கொண்டு இன்பத் திராவிட அமைப்பில் பங்குகொண்டு, பகைமைக்குப் பதில் தோழமையை வளர்க்க முன்வருவார் என்றெண்ணுகின்றோம்.

தமிழில் ஆட்சி

சென்னை ஆட்சியினரின் நல்லெண்ணம்காரணமாகத்தமிழ், ஆட்சி மன்றத்திற்கு வந்திருக்கிறது. இந்நிகழ்ச்சி தமிழுக்கு முதன்மைதருகின்ற, தமிழுக்குரிய உரிமையை அளிக்கின்றதென்பதெண்ணி நாம் மிக மிக மகிழ்கின்றோம்; ஆட்சியாளரைப் பாராட்டுகின்றோம். தமிழகம் முற்றும் 'தமிழாட்சி' நடைபெற விரைவில் ஆவன செய்யவும் வேண்டுகின்றோம். இவ்வகையில் நாம் குறிப்பிட வேண்டியதொன்றுண்டு. இப்போது ஆட்சியினர் அலுவலிலுள்ள பெரும்பாலோர் தமிழைச் சரிவரப் பிழையின்றி எழுதவும் பேசவும் அறியாதவர்கள். எனவே ஆட்சியில் பணிபுரியும் அனைவரும் ஒரு குறிப்பிட்ட தவணைக்குள் 'தமிழ்த்தேர்ச்சி' பெறுமாறு ஆளுவோர் திட்டமொன்று வகுக்க வேண்டும். மேலும் 'தமிழாட்சி' என்று சொல்லிக்கொண்டு ஆங்கிலச் சொற்கட்குப் பதில் ஹிந்துஸ்தானி, உர்து, சமஸ்கிருதச் சொற்களைத் தமிழ் எழுத்தில் எழுதுவதில்சிறிதும்பயனில்லை. எனவே சரியான தமிழ்ச்சொற்களைத் தக்காரைக் கொண்டு அமைத்து அதனைப் பரப்பு

வதும் இன்றியமையாததாகும். இவ்வகையில் அண்மையில் வெளிவந்துள்ள ஆட்சிச் சொல் அகரவரிசை* என்ற சிறு புத்தகம் தூண்டுதலாகவும் முன்மாதிரியாகவும் அமைந்திருக்கிறது. அரசினரும் பிறரும் இதனைப் பயன்படுத்தித் 'தமிழாட்சி'யை வெற்றிபெறச் செய்யவேண்டுகிறோம்.

அரசர் அண்ணாமலையார்

தமிழ் நாட்டுக்கெனத் தனிப் பல்கலைக் கழகம் கண்ட செட்டிநாட்டு அரசர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் உயிர் நீத்த செய்தி தமிழ்மக்களைத் துயரத்தில் ஆழ்த்திற்று. சிறந்த கொடையாளியாகத் திகழ்ந்த செட்டிநாட்டு அரசர், தமிழிசை இயக்கம் வேரூன்ற அரிய பணியாற்றியதைத் தமிழகம் மறக்கமுடியாது. நிகரற்ற வணிகராகவும், பெரும் செல்வராகவும், யாவரும்வியக்கும் திறலாளராகவும் திகழ்ந்த வள்ளல் அண்ணாமலையாரின் மாண்புக்கும் மனப்பண்புக்கும் விளக்கமாக, அவர்தம் புகழ்வடிவமாக அண்ணாமலைப் பல்கலைக் கழகம் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. தென்னாடு பெற்றெடுத்த அப்பெருமகனாரின் பிரிவினால் துயருறும் அவர்தம் புதல்வர்கட்கும் ஏனையோருக்கும் நம் ஆறுதல் உரியதாகுக!

நம்பிக்கை இழந்தனர்!

நம் சென்னை அரசினர் ஜனநாயக முறைகளில் நம்பிக்கையிழந்தவர்களாகவே நடந்து வருகின்றனர். அவர்கள் கையாளும் அடக்கு முறைகளும் நிறைவேற்றும் அவசரச் சட்டங்களும் இதனையே தெளிவுறுத்துகின்றன. ஆட்சிக்குத் தொல்லை விளைக்கின்றவர்கள், அநீதிக்குக் கொடிபிடிப்பவர்கள், போக்கிரிகள் இவர்களைத் தண்டிப்பதிலோ அழித்தொழிப்பதிலோ அவர்கள் அக்கறை காட்டுவார்களானால் அது முறையென்றே ஒப்பலாம். ஆனால் திராவிடர்கழகம் அரசியல் சார்பற்ற இயக்கம், சமுதாய சீர்திருத்தப் பிரசார நோக்கமுடையது என்று பெரியார் அவர்கள் பன்முறை கூறியும், கலகம், குழப்பம், அரசாங்கத்தைக் கவிழ்ப்பது ஆகிய பலாத்காரச் செயல்களில் கழகம் தலையிடக் கூடாதென்றும் தடுத்தும் வந்திருக்கிறார்கள். மேலும் திராவிடக் கழக நடவடிக்கைகளைக் கவனித்து வந்திருக்கும் யாரும இத்தகைய குற்றச் சாட்டுகளுக்கு அவர்களை உள்ளாக்க முடியாது. திராவிடர்கழகம் செய்வதெல்லாம் சமாதானமான முறையில் திராவிடருக்கு நேர்ந்துள்ள இழிவைப் பேச்சாலும் எழுத்தாலும் சுட்டிக்காட்டியும் அதை நீக்க வழிகாட்டியும் வருவதுதான். இந்த உரிமையையும் பறித்தொழிக்க அரசினர் திட்டமிட்டு விட்டனர் என்று தெரிகிறது. புலவர் குழந்தை எழுதிய ஒப்பற்ற இலக்கியம் "இராவணகாவியம்" தடைக்குள்ளாகியிருக்கிறது. இயக்க நாளிதழ் "விடுதலை"க்கு இரண்டாயிரம் ஜாமீன் கோரப்பட்டிருக்கிறது. இந்த நடவடிக்கைகளெல்லாம் பொதுமக்கள் சர்க்கார் செய்யக் கூடியனவா? இத்தகைய அடக்குமுறைகள் பயனளியா என்பதை அவர்கள்

*கிடைக்குமிடம்: திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், 6, பவழக்காரத் தெரு, சென்னை-1 விலை அணா 7.

அறியாதவர்களா? தம் ஆட்சி நேர்மையால் மக்களைக் கவர்ச்சியடையச் செய்வதை விடுத்து இக் குறுக்கு வழிகளில் செல்வது வீண் வம்பாகவே முடியும்; எனவே ஆட்சியினர் தம் போக்கினை மாற்றிக்கொண்டு மற்ற கட்சியினருக்குள்ள உரிமைகளை மதித்து நடத்த வேண்டுமாய்ப் பெரிதும் வேண்டுகிறோம்.

செழிக்கும் புதுக்கோட்டை

காவிரியில் கால்வாய்வெட்டிப் புதுக்கோட்டையைச் செழிக்கச் செய்ய வேண்டுமென்பது நெடுநாளைய எண்ணம். அந்த எண்ணத்தின் முதற்படியாக மூவாயிரம் ஏக்கர் நிலங்களுக்குப் பயன்படும்படி அத்திட்டம் நடைமுறைக்கு மிக விரைவில் வரப்போகிறதென்று ஒரு செய்தி கூறுகிறது. புதுக்கோட்டையை வளம்படுத்த வரும் 'பொன்னி' ஆறுக்கு நல்வரவு கூறுகிறோம்.

படிந்த வகுப்பு

பள்ளிக்கூடம் திறக்கின்ற இந்நாட்களில் ஒவ்வொரு ஆண்டிலும் 'பள்ளிகளில் இடம் இல்லை' என்ற கூக்குரல் கிளம்புவதுண்டு. வழக்கம் போலவே இந்த ஆண்டிலும் ஆரிய ஏடுகள் இக்கூக்குரலைக் கிளப்பியுள்ளன. ஒவ்வொரு ஏடும் கக்கியுள்ள கோபத்தைப் பார்த்தால் ஏதோ பெருத்த அநீதி இழைத்துவிட்டார்கள் அரசினர் என்றுதான் அனைவருக்கும் தோன்றும். ஆனால் உண்மை அதுவல்ல. மருத்துவக் கல்லூரி, பொறியியற் கல்லூரி ஆகிய தொழிற் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கும் போது தகுதி திறமை மட்டும் கவனியாது, மாணவர்கள் எந்தெந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பதையும் கவனித்து வகுப்பு விகிதாசாரப்படிதான் சேர்க்க வேண்டும் என்று அரசினர் கட்டளையிட்டிருக்கிறார்கள். அதன்படி எல்லா வகுப்பாருக்கும் ஓரளவுக்குச் சமநீதி வழங்கப்பட்டிருக்கிறது.

தகுதி திறமை என்று மட்டும் வைத்தால், பரம்பரை பரம்பரையாகப் படிப்பதற்கு வாய்ப்பும் வழியும் ஏற்படுத்திக் கொண்ட ஒரு கூட்டத்தாருக்கே அத்தனை இடமும் கிடைத்துவிடும் என்ற காரணத்திற்காகத்தான் இந்த 'வழிமறிப்பும்' 'பங்கிடும்' நடைபெறுகிறது. கல்லூரியில் இடம் தேடுவதிலும் உத்தியோகம் பெறுவதிலும் மட்டும் 'சாதி'யொழிப்புக் கோலம் கொள்ளும் தகுதியாளர்கள் தம் படைப்பான 'வர்ணாஸ்ரம தருமத்தை' ஒவ்வொரு துறையிலும் அழித்தொழிக்க முனைவார்களேயானால் எவ்வளவு பயன் கிட்டும்! சாதிப்பிரிவு தமக்குப் பயன் தரும் துறையில் அதனை நீடிக்கவும், தமக்குத் தீங்கு தரும் துறையில் அதனை ஒழிக்கவும் படித்த வகுப்பார் முனைவதை யாரும் விரும்ப மாட்டார்கள்!

'பொன்னி'

மாதமிருமுறையாக வெளிவரும் 'பொன்னி' உரிய நாட்களில் வருவதில்லையென்று நண்பர்கள் சினந்து எழுதியுள்ளார்கள். ஒவ்வொன்றுக்கும் நாங்கள் சென்னையை எதிர்நோக்க வேண்டியிருப்பதால்தான் இத்தொல்லை. பத்திரிகைத்தாள் உரிய காலத்தில் வராததால் 1-6-48 இதழ் வெளிவரவில்லை. இந்த இதழும் தாமதித்து வருகிறது. இனி இவ்வாறு நேரா வண்ணம் ஏற்பாடுகள் செய்துள்ளோம். நடந்த தவறுக்கு நண்பர்கள் மன்னிப்பார்களாக! 'பொன்னி'யின் உயர்வு நாடி அனைவரும் ஒத்துழைக்கப் பெரிதும் வேண்டுகிறோம்.

ஆசிரியர்.

தொடர் கதை



கண் திறக்குமா?

ஆசிரியர்: நக்கீரன்

பதினான்காம் அத்தியாயம்

— விரும்பிய விதமே —

அன்று சாயந்திரம் பாரிஸ்டர் பரந்தாமனை நான் விட்டாலும் அவர் என்னை விடுவதாயில்லை. ஆகவே வேறு வழியின்றி அவருடன் திலகர் குருகுலத்துக்குச் சென்றேன். குருகுலத்தைப் பார்வையிட வந்திருந்த பெரிய மனிதருக்குப் பரந்தாமன் என்னை அறிமுகம் செய்து வைத்தார். இருவரும் பரஸ்பரம் வணக்கம் தெரிவித்துக்கொண்டபிறகு, எல்லோருமாகச் சேர்ந்து குருகுல்த்தைச் சுற்றி வந்தோம். எங்களுடன் குருகுல நிர்வாகிகளும் கலந்து கொண்டனர். பாரிஸ்டர் பரந்தாமன் தாம் அதுவரை குருகுலத்துக்காகச் செய்திருக்கும் தன்னலமற்ற சேவையைப் பற்றித் தன்னடக்கத்துடன் வந்திருந்த பெரிய மனிதரிடம் சொல்லிக்கொண்டு வந்தார். அவரும் அவற்றையெல்லாம் கேட்டுப் பாரிஸ்டர் எதிர்பார்த்தபடி பிரமித்துப் போனார். மனிதன் உண்மைக்கு வசப்படுவதைக் காட்டிலும் பொய்க்குத்தான் அதிகமாக வசப்பட்டுவிடுகிறான்" என்னும் உண்மையை அன்றுதான் நான் தெரிந்து கொண்டேன்.

குருகுலம் முழுவதையும் பார்வையிட்ட பிறகு, தமக்காகவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் பெரிய மனிதர் பேசினார். "பிற்கால வாழ்க்கை பாழாய்ப் போகுமே!" என்பது

தெரிந்தோ தெரியாமலோ அந்தக் குருகுலத்தில் படிக்கும் நாதியற்ற சிறுவர்கள் அனைவரும் கூட்டத்தில் கலந்து கொண்டனர். பேசும் விஷயத்தைப் பகுத்தறிவுக் கண் கொண்டு பார்க்கும் சக்தி அவர்களுக்கு இல்லாவிட்டாலும், எடுத்ததற்கெல்லாம் கரகோஷம் செய்யும் சக்தி மட்டும் அவர்களுக்கு இருந்தது. இதில் வேடிக்கை என்னவென்றால், பாரிஸ்டர் பரந்தாமனைப் பற்றி வந்திருந்த பெரிய மனிதர் ஏதாவது பாராட்டிச் சொல்லும் வரைகூட அவர்கள் காத்திருக்கவில்லை. அவர் பெயரைக் குறிப்பிடும் போதே கைதட்ட ஆரம்பித்து விட்டார்கள்! இப்படி ஒரு முறை இரு முறையல்ல; அந்தப் பிரசங்கம் முடியும் வரை அவருடைய பெயர் எத்தனை இடங்களில் வந்ததோ அத்தனை இடங்களிலும் அவர்கள் கைதட்டி ஒரே ஆரவாரம் செய்தார்கள்! பாரிஸ்டர் பரந்தாமனிடம் தாங்கள் கொண்டுள்ள பக்திக்கு அடையாளமாகத்தான் அவர்கள் அவ்வாறு செய்தார்களோ, யார் கண்டார்கள்?

ஸ்ரீமான் பரந்தாமனைப்பற்றி 'இரண்டு வார்த்தை' சொல்வதாக எழுந்த பெரிய மனிதர் இருநூறு வார்த்தைகளுக்கு மேல்பேசிக்கொண்டே போனார். "உலகத்தில் பலனை எதிர்பாராமல் கருமத்தைச் செய்யும் மிகச் சில கர்மயோகிகளில் பாரிஸ்டர் பரந்தாமனும் ஒருவர்" என்று அவர் பெருமிதத்துடன் குறிப்பிட்டார். சர்க்கார் ஆதரவில் நடைபெறும் கல்லூரிகளைப் பகிஷ்கரித்து விட்டு இம்மாதிரிக் குருகுலங்களில் மாணவர்கள் சேர்ந்து படிக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றி அவர் வற்புறுத்தினார். நடுநடுவே தம்மைப்பற்றியும், தர்ம காரியங்களில் தமக்குள்ள சிரத்தையைப்பற்றியும் குறிப்பிட அவர் மறந்துவிடவில்லை. அவர் பேசி முடிந்த பிறகு, என்னையும் ஏதாவது பேசும்படி கேட்டுக் கொண்டார் பரந்தாமன். "சர்வகலாசாலை அளிக்கும் யோக்கியதாம்சங்களைப் பார்த்துச் சர்க்கார் உத்தியோகம் கொடுக்கும் வழக்கம் ஒழியும்வரை இம்மாதிரிக் குருகுலங்களால் யாருக்கும் நன்மையில்லை என்பது என் தாழ்மையான அபிப்பிராயம். அதைப்பற்றி வேண்டுமானால் பேசட்டுமா?" என்று நான் கேட்டேன். "கடைசியில் கூட்டத்தைக் கசப்புடன் முடிக்க நான் விரும்ப வில்லை; வந்தனோபசாரம் கூறி இனிப்புடன் முடித்து விடுகிறேன்" என்றார் பரந்தாமன். "அப்படியே செய்யுங்கள்" என்று சொல்லிவிட்டு நான் பேசாமலிருந்து விட்டேன். பாரிஸ்டர் பரந்தாமன் எழுந்து பதிலுக்குப் பதில் கணக்கைத் தீர்த்துக் கொள்வது போல், பெரிய மனிதரின் உதார குணத்தைப்பற்றி வானளாவப் புகழ்ந்து பேசினார், பிறகு எல்லோருக்கும் தம் வந்தனத்தைத் தெரிவித்துக் கொண்டு, தாம் சொன்னது போல் கூட்டத்தை இனிது முடித்து வைத்தார்! அடுத்த நிமிஷம் பெரிய மனிதர் தம் கையில் தயாராக எடுத்து வைத்திருந்த ஓர் ஆயிரம் ரூபாய் 'செக்கை' எடுத்துப் பரந்தாமனிடம் கொடுத்தார். அகமும் முகமும் ஒருங்கே மலர அதைப் பெற்றுக்கொண்டு,

“தங்களைப் போன்ற தாராள சிந்தையுள்ளவர்கள் இந்த நாட்டில் இருக்கும் வரை என்னைப் போன்றவர்கள் எத்தனை தர்ம காரியங்களில் வேண்டுமானாலும் துணிந்து இறங்கலாம்” என்றார் பாரிஸ்டர். அவர் சொன்னதும் ஒரு விதத்தில் உண்மைதானே!

கூட்டம் கலைந்த பிறகு, மூவரும் பேசிக் கொண்டே குருகுலத்தின் வாயிலை நோக்கி நடந்தோம். திடீரென்று எனக்கு ஒரு யோசனை தோன்றியது உடனே நான், பெரிய மனிதரை நோக்கி, “உங்களுக்கு எத்தனை குழந்தைகள்?” என்று கேட்டேன்.

“இரண்டு பையன்களும் ஒரு பெண்ணும் இருக்கிறார்கள்” என்றார்.

“அவர்கள் எங்கே படிக்கிறார்கள்?”

“ஒருவன் பிரஸிடென்ஸி காலேஜில் படிக்கிறான், இன்னொருவன் லயோலா காலேஜில் படிக்கிறான்; பெண் குழந்தை க்வீன் மேரீஸ் காலேஜில் படிக்கிறது; ஏன், எதற்காகக் கேட்கிறீர்?”

“இல்லை, பாரிஸ்டர் பரந்தாமனுக்குத்தான் சின்னக் குழந்தைகள் எதுவுமில்லை. ஆகவே, அவர் தம் குழந்தைகளை முதலில் குருகுலத்தில் விட்டு, பிறருக்கு வழிகாட்ட முடியாமலிருக்கிறது. நீங்களாவது உங்கள் குழந்தைகளை நம்முடைய திலகர் குருகுலத்தில் விட்டிருக்கலாமே!” என்றேன்.

இதை நான் சாதாரணமாகத்தான் சொன்னேன். ஆனாலும் ஏனோ அந்தப் பெரிய மனிதர் என்மீது அளவு கடந்த கோபம் கொண்டு விட்டார். உடனே அவர் மீசை துடித்தது; கண்கள் ‘ஜிவ்’ வென்று சிவந்து விட்டன. அவர் தம் கைத்தடியை அப்படியும் இப்படியுமாக ஆட்டிக்கொண்டே, “ஏதேது! இந்தத் தம்பி பெரிய அதிகப் பிரசங்கியாக இருப்பான் போலிருக்கிறதே! இவனைப் போன்றவன்களிடத்திலெல்லாம் நீங்கள் சிநேகமே வைத்துக்கொள்ளக், கூடாது ஸார்” என்றார் பரந்தாமனை நோக்கி. பாவம், பரந்தாமன் என்ன செய்வார்? அவர் என்னை வெறிக்க வெறிக்கப் பார்த்தார்! நானும் செய்வது இன்னதென்று அறியாது திகைத்தேன்!

அதற்குள் நாங்கள் குருகுலத்தின் வாயிலை அடைந்து விட்டோம். பெரிய மனிதர் ஆத்திரத்துடன் அவசர அவசரமாகச் சென்று தம் காரை நெருங்கினார். அங்கே டிரைவரைக் காணவில்லை. “எய், முனிசாமி! எய், முனிசாமி!” என்று இரைந்தார். பதில் இல்லை. அவன் சற்று தூரத்திலிருந்த ஒரு மரத்தடியில் நின்று கொண்டிருந்தான். அவனுக்கு அருகே ஒரு சின்னஞ் சிறு சிறுமி தலைவிரி கோலத்துடன் நின்று கொண்டிருந்தாள். அவளுடைய கண்கள் கலங்கியிருந்தன. அவள் அவனிடம் என்னவெல்லாமோ சொல்லிக்கொண்டிருந்தாள். அதைக் கேட்டுக் கொண்டு முனிசாமி ஓடோடியும் வந்தான். அவனைக் கண்ட

தும "இவ்வளவு நேரமா எங்கேடா போயிருந்தே?" என்று எரிந்து விழுந்தார் பெரிய மனிதர்.

முனிசாமி அவருடைய கேள்விக்குப் பதில் சொல்லாமல், "எசமான்! ஒரு சேதிங்க! ரொம்ப ஆபத்துங்க, குழந்தை என்னைத் தேடிக்கிட்டு வந்திருக்குது. விட்டிலே குளிதுளிக்க அவஸ்தைப் படறுங்களாம்; இந்தச் சமயத்திலே என் கையிலே ஒரு காலணு இல்லே! ஊரிலேயிருந்து வந்திருக்கிற என் அக்கா பத்து ரூபாயாச்சும் கேட்டு வாங்கி வரச்சொன்னுங்களாம்! நீங்கதான் இந்தச் சமயத்திலே உதவணும்; இந்த மாசச் சம்பளத்திலேயே வேணுமானுலும் பிடிச்சுக்கிடுங்க. என்ன சொல்றிங்க, எசமான்?" என்று கேட்டான் வினயத்துடன்.

"என்னை என்னடா செய்யச் சொல்றே, நாயே! சீ, ஏறு வண்டியிலே! ஏன், நேற்றே அவளை எங்கேயாவது ஆஸ்பத்திரியில் கொண்டு போய்த் தள்ளிவிட்டு வருவதற்கென்ன? உன் பவிசுக்கு விட்டிலேயே வைத்து அவளைப் பார்க்க வேண்டுமாக்கும்! நான் என்ன, வட்டிக் கடையா வைத்திருக்கேன், நீ கேட்டபோதெல்லாம் பணம் கொடுக்க?......உம்.........ஏறு, வண்டியில்! நான் அவசரமாகப் போகணும்!" என்ருர் தர்மப் பிரபு.

அதற்கு மேல் முனிசாமி ஒன்றும் சொல்லத் தோன்ருமல் காரில் ஏறிக்கொண்டு, "உங்களைக் கொண்டு போய் விட்டில் விட்டு விட்டு நான் போய் விடுவேனுங்க!" என்ருன்.

"சரி, சரி; எப்படியாவது தொலைந்து போ!" என்ருர் பெரிய மனிதர்.

கண்ணீர்ப் பெருக்குடன் சிறுமி ஓடோடியும் வந்து, "அப்பா, அப்பா!" என்ருள் தினக்குரலில்.

அவளை இதயம் என்று ஒன்று படைத்திருந்த பெரிய மனிதரும் லட்சியம் செய்யவில்லை; இதயம் என்று ஒன்று படைத்திராத காரும் லட்சியம் செய்யவில்லை. முனிசாமி மட்டும் தன் கண்களில் கலங்கிய கண்ணீரைத் துடைத்து விட்டுக் கொண்டே, "நீ போ, அம்மா! நான் இதோ வந்து விடுகிறேன் என்று சொல்லு!" என்று சொல்லிவிட்டுக் காரை ஓட்ட ஆரம்பித்தான்.

நான் என்னுடைய சட்டைப் பையில் கையை விட்டுத் துழாவிப் பார்த்தேன். கசங்கிப் போன ஒரே ஒரு ஐந்து ரூபாய் நோட்டு நல்ல வேளையாக இருந்தது. அதை எடுத்து அந்தச் சிறுமியிடம் கொடுத்து விட்டுத் திரும்பினேன்.

"இதுதான் தர்மம். இருந்தாலும் இதெல்லாம் உலகத்துக்கு எங்கே அப்பா தெரிகிறது? எதுவாயிருந்தாலும் அதைத் தக்க விளம்பரத்தோடு செய்தால்தான் உலகம் ஒப்புக்கொள்கிறது!" என்று சொல்லிக்கொண்டே பாரிஸ்டர் தம் காரில் ஏறிக்கொண்டார். நானும் ஏறி அவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்தேன்.

"என்னுல உனக்கு இன்று ஒரு ஐந்து ரூபாய் நஷ்டம்!" என்ருர் பரந்தாமன்.

"எப்படி நஷ்டமாகும்? தெருவிலா வீசி எறிந்துவிட்டேன்?" என்றேன் நான் எரிச்சலுடன்.

"தெருவில் வீசி எறிந்த மாதிரிதான்! அதனுல் உனக்கு ஏதாவது பலன் உண்டா?"

"ஐயா! எதைச் செய்தாலும் நீங்கள் பலனோடு செய்து கொண்டு போங்கள்! எனக்குப் பலனும் வேண்டாம், பதவியும் வேண்டாம். மனிதனை மனிதனுக மதித்து இரங்கும் மனம இருந்தால் போதும்!"

"நான்சொன்னுல் கேட்பாயா? சொல்பவர்கள் சொன்னுல் கேட்பாய்!"

"யார் சொன்னுலும் கேட்க மாட்டேன். என் மனதுக்கு எது சரி என்று படுகிறதோ, அதைத்தான் எடுத்துக்கொள்வேன்."

"உண்மையாகவா சொல்கிருய்?"

"உண்மையாகத்தான்!"

"இன்னெருமுறைசொல்லு?"

"இன்னெரு முறை என்ன? இன்னும் எத்தனைமுறைவேண்டுமானுலும் சொல்வேன்!"

இப்படிச் சொன்னதும் பரந்தாமன் என்னை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்து விட்டுப் புன்னகை புரிந்தார். பிறகு என்னைத் தூக்கி வாரிப் போடும்படியாக, "சாந்தினி சொன்னுல் கூடவா கேட்கமாட்டாய்?" என்ருர் சிரித்துக் கொண்டே.

என் தலை சுழன்றது; என் உலகமே சுழன்றது. என்ன கேட்கிருரும் என்று தெரியாமல் "என்ன சொல்கிறீர்கள்?" என்றேன்.

"சாந்தினி சொன்னுல் கூடக் கேட்க மாட்டாயா என்றேன்!" என்ருர் அவர் சாவதானமாக.

"சாந்தினி சொனனுல் நான் ஏன் கேட்கவேண்டும்?" என்றேன், நான் தட்டுத் தடுமாறிக் கொண்டு.

"என்னப்பா எனக்கு ஒன்றும் தெரியாது என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா? எல்லாம் தெரியும். வேண்டுமானுல் இந்த டயரி'களைப் பார்! எல்லாவற்றையும் பார்க்க வேண்டாம்; நான் அடையாளம் வைத்திருக்கும் பக்கங்களை மட்டும் பார்த்தால் போதும்!" என்று சொல்லி, அவர் என்னிடம் இரண்டுடயரிகளை எடுத்துக் கொடுத்தார். அந்த டயரிகளின்மேல் "சாந்தினி" என்று எழுதி யிருந்தது!

நடுங்கும் கைகளுடன் நான் அவற்றை வாங்கிப் பிரித்துப் பார்த்தேன். பின்வரும் இடங்களில் அவர் அடையாளம் வைத்திருந்தார்.

காந்திஜியின் விடுதலையைக் கோரி எழுந்த கிளர்ச்சியில் அவர் பங்கெடுத்துக் கொண்டதை நினைக்க நினைக்க எவ்வளவோ பெருமையாயிருக்கிறது. அதைப்பற்றி எனக்குத் தெரிந்தவர்கள் பேசிக்கொள்வதைக் கேட்கும்போது என்

உடம்பை என்னவோ செய்கிறது. உணர்ச்சியும் மகிழ்ச்சியும் ஏக காலத்தில் போட்டி போட்டுக் கொண்டு எழுந்து என்னைத் திக்கு முக்காடச் செய்து விடுகின்றன. அன்று என் அப்பாவுடன் அவர் சண்டை பிடித்ததைத் தான் என்னால் மறக்க முடியுமா?

ஃ ஃ ஃ

கிளர்ச்சியில் பங்கெடுத்துக் கொண்டதைப்பற்றி மகிழ்ச்சி தான். ஆனால், போலீஸாரின் தடியடி அவரைப் பலமாகத் தாக்கி விட்டது என்பதைக் கேட்கும் போது என் உடல் பதறுகிறதே!

பதறினால் என்ன? பிரிவுரும் துக்கத்தை ஒருவாறு அடக்கிக்கொள்ள வேண்டியது தான். மரணமே சம்பவித்தாலும் கலங்காத மனம் இருந்தாலல்லவா சுதந்திரம் பெற முடியும்? இல்லையென்றால் விடுதலை வாழ்வில் ஆர்வம் இருந்து என்ன பயன்?

ஃ ஃ ஃ

இன்று ஆஸ்பத்திரிக்குச் சென்றிருந்தேன்—அப்பாவுக்குத் தெரியாமல் தான்!

இப்படிச் செய்வது தவறு என்பது எனக்குத் தெரியத்தான் தெரிந்தது. இருந்தாலும் அந்தத் தவறு தவிர்க்க முடியாததாக இருக்கிறதே!—அப்பாவுக்குத் தெரிந்து செல்வோமென்றால் அவர் என்னை ஆஸ்பத்திரிக்குப் போக விடுவாரா என்ன?

அப்பப்பா! இந்த ஆஸ்பத்திரிக்குச் செல்ல நான் என்ன பாடுபட வேண்டியிருந்தது! அதற்குக் கூடச் சர்க்காரிடம் அனுமதி வாங்க வேண்டுமாமே அனுமதி!-என்ன இருந்தாலும் இந்த வெள்ளைக்காரர்கள் பொல்லாதவர்கள் தான், போ.

இவ்வளவு பாடுபட்டுச் சென்றும் என்ன பிரயோசனம்? எனக்கு முன்னால் அவருடைய [illegible]ரும் தங்கையும் வந்து உட்[illegible]ந்திருக்கிறார்கள். அவர்களுக்கு முன்னால் நான் எப்படிப் போவது? அவர்கள் பார்த்து விட்டுச் செல்லும் வரை நான் காத்திருக்க வேண்டியது தான்!

காத்திருந்தது வீணாக வில்லை. அன்றே நான் அவரைப் பார்க்கத் தான் பார்த்தேன்!

என்ன துணிச்சல் எனக்கு?—இப்பொழுதான் நான் அவரை முதல் தடவையாகப் பார்க்கிறேனுக்கும்!

என்னை அவர் பார்ப்பதும், அவரை நான் பார்ப்பதுமாக எவ்வளவுநேரம்தான் பார்த்துக்கொண்டிருப்பது?-இதோ மணி அடித்து விடுவார்கள் போலிருக்கிறதே!

நல்ல வேளையாக அவருடைய கண்கள் மோன பாஷையில் பேசுவதை நிறுத்தி விட்டன. அவர் வாய் திறந்து, "சாந்தினி நீயா!" என்று என்னை வியப்புடன் கேட்டு விட்டார்.

அவருடன் எனக்கும் எவ்வளவோ பேசவேண்டும் போல்தான் இருந்தது. அதற்குப் பாழும் காலம் கருணை புரியுமா என்ன?—"என்னை மறவாதீர்!" என்று எண்ணி ஒரே ஒரு வார்த்தை சொல்லி விட்டு வந்து விட்டேன்.

உடம்பு குணமானதும் அவரைச் சிறைக்கு அனுப்பி விடுவார்கள். அவர் சிறை சென்ற பிறகு அவருக்குக் கடிதம் எழுத மாட்டேன். அது அவருடைய மன அமைதியைக் குலைத்தாலும் குலைத்துவிடுமல்லவா? அதற்குப் பதிலாக அவர் மீது செலுத்த வேண்டிய அன்பை அவருடைய தாயார் தங்கைமீது செலுத்தினால் போகிறது!

ஃ ஃ ஃ

பாவம், அவர்தம் தாயாரின் தகனக் கிரியையின் போது அருகில் இருக்கவில்லை. இந்தப் பரிமளாவுக்கு ஏன் அவர் மீது அவ்வளவு ஆத்திரம்?—என்ன இருந்தாலும் பெண் அவளுக்காக நாம் இரங்கத்தான் வேண்டும். சிநேகம் செய்து கொள்வதாயிருந்தாலும் சரி, சண்டை பிடித்துக்கொள்வதாலும் சரி—பெண்களை யாரும் மிஞ்ச முடியாதல்லவா?

ஃ ஃ ஃ

இன்று ஸ்டேஷனுக்குச் சென்றிருந்தேன்—பரிமளாவை வழியனுப்பத்தான்!

அவளுடைய மாமா அவளைத் தஞ்சைக்கு அழைத்துக்கொண்டு போகிறார். இங்குதான் அவள் தன்னந்தனியாக இருந்து கொண்டு என்ன செய்வாள்?

இருந்தாலும் தான் மாமாவுடன் போவதைப்பற்றி இவள் அவருக்கு ஒரு கடிதமாவது எழுதிப் போட்டிருக்கலாம். பெண் மனம் பித்து என்று ஏன்தான் சொல்கிறார்களோ?

ஃ ஃ ஃ

பரிமளாவிடமிருந்து எனக்கு அடிக்கடி கடிதம் வருகிறது ஆனால் அவளுடைய கடிதங்களெல்லாம் வரவர அழுது வடிகின்றனவே!—இதைப் பார்க்கும்போது அவள் இங்கேயே இருந்திருக்கலாம் என்று எனக்குத் தோன்றுகிறது.

அந்தச் சிவகுமாரன் நாசமாய்ப் போக!

ஃ ஃ ஃ

மூன்று வருடங்களுக்குப் பிறகு அவர் இன்று என் வீட்டைத் தேடி வந்திருக்கிறார். அவரை மனங் கனிந்து வரவேற்பதற்குச் சமூகம் என்னை அனுமதிக்க மாட்டேன் என்கிறது. கழுத்தில் தாலி ஏறினால் தான் அந்த அனுமதி எனக்குக் கிடைக்கும் போலும்!

இருந்தாலும் இன்றைக்கில்லாவிட்டாலும் நாளைக்காவது நான் அவரைச் சந்திக்கத்தான் போகிறேன். ஆனால் அதற்கு என்ன செய்வது?

ஆம். அப்படித்தான் செய்ய வேண்டும். 'நாளை மாலை என்னை ஜெனரல் ஆஸ்பத்திரி வாயிலண்டை வந்து சந்திக்கவும்' என்று ஒரு கடிதம் எழுதி அவரிடம் எப்படியாவது சேர்த்துவிட வேண்டும்.

சரி, எல்லோரும் தூங்கித் தொலையட்டும். நாம் சந்தடியின்றி சென்று அவர் படுக்கையறைக்குள் கடிதத்தை விட்டெறிந்து விட்டு வந்து விடலாம்.

ஃ ஃ ஃ

பாழும் பொழுது இன்று போகவே மாட்டேன் என்கிறதே! மணி எப்பொழுதான் நாலு அடிக்கப் போகிறதோ?

அப்பாடி! எவ்வளவோ நேரம் என் பொறுமையைச் சோதித்த பிறகு மணி நாலு அடித்துவிட்டது. இந்நேரம் வாசலில் வந்திருப்பார்!

இந்தச் சிநேகிதைகளின் தொல்லை வேறு பெரிய தொல்லையாயிருக்கிறது!—"இன்று என்னுடைய நடையுடை பாவனையே அடியோடு மாறி விட்டிருக்கிறதாமே!"—மாறாமல் என்ன செய்யுமாம்?

சாயந்திர வேலையல்லவா? டிராமில் ஏராளக் கூட்டம். ஆனாலும் நாங்கள் இருவரும் எப்படியோ தொத்திக்கொண்டு விட்டோம்.

எங்குதான் போகிறோமோ?

எனக்கென்ன?—அவர் எங்கே போகிறாரோ, அங்கே நானும் போகிறேன்!

கடைசியில் இந்தக் கடற்கரைக்குத் தானு வந்து சேர்ந்தார்?—ஆமாம். எங்களைப் போன்றவர்களுக்கு இதை விட்டால் வேறு கதி ஏது?

கரையோடு போகிற சனியன்களெல்லாம் எங்களை ஏன் இப்படி விழுங்கி விடுவதுபோல் பார்த்துத் தொலைக்கின்றனவோ? — கொஞ்சமாவது இங்ஙனம் தெரிந்தால் தானே?—மகா மோசமான ஜனங்கள்!

அந்தச் சனியன்களை நாங்கள் லட்சியம் செய்யவில்லை. வெகு நேரம் என்னவெல்லாமோ பேசிக் கொண்டிருந்தோம். அந்தச் சம்பவத்தை இன்று நினைத்துப் பார்த்தால் கூட என்னை வெட்கம் வந்து கப்பிக்கொண்டு விடுகிறது!

மேலே எப்படி எழுதுவேன்?

கடைசியில் அந்தச் சிவகுமாரனைப்பற்றி அவரிடம் சொன்னேன். அவரும் உடனே தஞ்சைக்குச் செல்லத் துடிதுடித்தார். என்ன இருந்தாலும் உடன் பிறந்த சகோதரியல்லவா?

ஆனல் வழிச் செலவுக்கு அவரிடம் பணம் ஏது?—நான் தான் அப்பா புடவை வாங்கிக் கொள்வதற்காகக் கொடுத்த ரூபாயில் கொஞ்சம் கொடுத்து அனுப்பினேன். இந்த அற்ப உதவியை அவருக்குச் செய்ததில் தான் எனக்கு ஆனந்தம்!

ஃ ஃ ஃ

இன்று பரிமளா இங்கே வந்து விட்டாள். இவளைக் காணுமல் அவர் அங்கே எப்படித் தவிக்கிருரோ? - உடனே ஒரு தந்தி அடித்து விட்டு வருவோமா?

நல்லவேளையாக அவர்கள் வீடும் காலியாகி விட்டது. பரிமளாவை எங்கே கொண்டு போய்ச் சேர்த்து விடலாம்.

ஃ ஃ ஃ

இதென்ன, இன்று அவருடன் பார்த்த இரு பெண்களும், யாராயிருப்பார்கள்?—அவர்கள் தாயும் மகளுமாயிருப்பார்களோ? அவர்களில் ஒருத்தியுடன் ஒரு கைக் குழந்தை கூட இருந்ததே!

நாளைக்கே எல்லாம் தானே தெரிந்து விடுகிறது. அதற்காக இப்பொழுதே ஏன் குழப்பிக் கொள்ள வேண்டும்?

இன்றும் அவருடன் ஒரே ஒரு வார்த்தை தான் என்னல் பேச முடிந்தது—அதாவது நேரே உங்கள் வீட்டுக்குச் சென்று பாருங்கள்!'' என்று!

இப்படி யாருக்கும் தெரியாமல் எத்தனை நாட்கள் பழக முடியும்? இது பெரிய சங்கடமாயிருக்கும் போலிருக்கிறதே!

அப்பாவுக்குத் தெரிந்து பழகினல் எவ்வளவோ நன்ருயிருக்கும்?—எனக்கும் அவரிடம் எப்படியாவது விஷயத்தைச் சொல்லிவிட வேண்டுமென்றுதான் இருக்கிறது, ஆனல் அதற்கு வேண்டிய தைரியந்தான் வரவில்லை!

அப்படியே சொல்லி விடுவதாக வைத்துக்கொள்வோம். அப்பா அதற்கு மறுதளித்து விட்டால்...?

அப்புறம் இந்த உடம்பில் உயிர் தான் என்னத்துக்கு, இந்த உலகம் தான் என்னத்துக்கு?

ஃ ஃ ஃ

இதற்குமேல்டயரியில்ஒன்றும் எழுதப்பட் டிருக்கவில்லை. வேறு என்ன எழுதவேண்டும்? இவை போதாதா, என்னைச் சந்தியில் இழுத்து வைக்க?

நான் ஒன்றுந் தோன்ருதவனய் முகத்தில் அசடு வழியப் பாரிஸ்டரைப் பார்த்தேன். அவர் 'இடி இடி' என்று சிரித்தார்.

நான், "என்னை மன்னியுங்கள்!" என்றேன் மென்று விழுங்கிக் கொண்டே.

"எதற்கு?" என்று கேட்டார் அவர்.

"முறை தவறி நடந்துகொண்டதற்கு!"

"அப்படியானால் சாந்தினியை யார் மன்னிப்பது?"

"நீங்களே தான்!"

"அதெல்லாம் நான் உங்களை மன்னிக்கப் போவதே யில்லை. அதற்குப் பதிலாக நன்றி தான் செலுத்தப் போகிறேன்!"

"என்ன!"

"ஆமாம், உங்கள் இருவருக்கும் குறுக்கே நிற்க நான் விரும்பவில்லை!"

இதைக் கேட்டதும் நான் வெட்கத்தால் தலை குனிந்தேன். நல்லவேளையாக அதற்குள் காரும் அவர் வீட்டு வாயிலை அடைந்து விட்டது. நான் பரபரப்புடன் கதவைத் திறந்து கொண்டு இறங்கப் பார்த்தேன். அவர் என்னைத் தடுத்து நிறுத்தி, என் கையிலிருந்த டயரிகளை மட்டும் வாங்கிக் கொண்டார். "கல்யாணமான பிறகு வேண்டுமானால் இந்த டயரிகளை நீரே வைத்துக் கொள்ளலாம். இப்பொழுது இதைக் காணாமல் அவள் தேடிக் கொண்டிருப்பாளே!" என்றார்!

அவ்வளவு தான்; "விட்டால் போதும்!" என்று ஆகிவிட்டது! எனக்கு அவரையும் மீறிக் காரின் கதவைத் திறந்து கொண்டு கீழே இறங்கினேன். அடுத்த கணம் என் வீட்டை நோக்கி எடுத்தேன் ஓட்டம்.

(தொடரும்)



வருத்தாதீர்!

சாமி. பழனியப்பன்

ஓங்கி வளர்ந்துள்ள புன்னையதில்—மிக
ஒய்யார மாகவே வீற்றிருந்து
மாங்குயில் கூவிடுங் காட்சிகண்டே—அந்த
மாவடுக் கண்ணினாள் வாயுரித்துத்
'தீங்குரற் புட்களே! அன்றொருநாள்—என்றன்
செம்ம லுடனேநான் வீற்றிருந்து
தேங்குரல் லின்பம் நுகர்ந்திருந்தேன்—இன்றென்
செம்ம லில்லைவருத் தாதீ(ர்)'என்றாள்.

வானத்தி னின்று மிதந்தெழுந்த—முழு
வட்ட மதியின் வருகை கண்டே
மானந் துறந்தல்லிப் பூக்களெல்லாம்—மூடு
மடலவிழ் காட்சியைக் கண்ட பெண்ணாள்
'நானு மென துயி ரேந்த லுடன்—அன்று
நல்லின்ப மேற்று மகிழ்ந்திருந்தேன்
ஆனாலு மின்றென தேந்தலில்லை—என்றன்
அகத்தினை நீர்வருத் தாதீ(ர்)'என்றாள்.

அந்திப் பொழுதினிற் சோலையிலே—மணம்
அள்ளி இறைத் துச்செல் கின்ற தென்றல்
சுந்தரி மெல்லுடல் மோதிச்செல்லும்—அந்தத்
தோகை மயிலாள் துயர முற்றே
'சுந்தர னென்னுட னன்றிருந்தார்—இன்பந்
துய்த்தன மின்ப மளித்தனை நீ!
இந்நாளச் சுந்தர னில்லையதால்—உள்ளம்
ஏங்கு தெனை வருத் தாதே!'என்றாள்.

ஊடல்

வெ. குருசாமி



எனக்காக எழில்கூட்டி இயற்கை மங்கை
எதிர்வந்து நிற்பாள்; அக் கோதை யாளின்
மனக்காதல் எனவந்து மருவும்! இன்ப
மணந்தந்து அவளிதழ்கள் முறுவல் செய்யும்!
புனற்குன்றும் உயர்மார்பில் உலவும் ஆடை
புத்தழகோ டெனவந்து மருவச் சொல்லும்;
உனக்கென்றே நானுள்ளேன் என்பாள் அந்த
உயிர்மொழிகள் என்னெஞ்சை அள்ளிப்போகும்!

நெஞ்சோடு நெஞ்சொன்றக் காதல் கொண்டோம்
நேரிழையாள் நாள்தோறும் அழகு செய்தே
எஞ்சாத அன்போடு பொழிலில் வந்தே
எனக்காகக் காத்திருப்பாள் அப்போ தெல்லாம்
பஞ்சோடு தீச்சேரும் பான்மை போலப்
பாவையவள் நினைவென்றன் நெஞ்சைத் தாக்கும்
'அஞ்சாதே!' என்றால்என் நெஞ்சா கேட்கும்!
அறியாமல் என்கால்கள் சோலை செல்லும்!

தென்றலிலே மணங்கமழக் காதற் செய்தி
தெரிவிப்பாள் அதுவந்தென் காதுக்குள்ளே
குன்றாத இனிமையொடு குளிர்ந்த சேதி
குறித்திடுமப் போதென்றன் கால்கள் சோலை
சென்றடைய விரைவாக முனையும்; ஆசை,
"செல்கநீ! விரைவாக!" என்ன உந்தும்
நன்றென்று பொழிலிடையே நான்நுழைந்தால்
நங்கையவள் என்னுடனே ஊடிக் கொள்வாள்!

நாகர்கோவிலில்

எழுத்தாளர்கள்

மூன்றுவது தமிழ் எழுத்தாளர் மாநாடு இம்முறை மே 14, 15 நாட்களில் நாகர்கோவிலில் கூடியது மிக முக்கியம் வாய்ந்ததாகும். தமிழருக்குச் சொந்தமான, தமிழர் பெரும் பகுதியினராக உள்ள நாஞ்சில் நாடு இப்போது திருவாங்கூர் சமஸ்தானத்து மலையாளிகளிடம் சிக்கிக்கொண்டிருக்கிறது. அங்கிருக்கும் நமது சகோதரத் தமிழர்கள் தங்கள் உரிமைக்காகத் தொடங்கியிருக்கும் போராட்டத்திற்கு மிக உற்சாக மளிப்பதாகவும், உரிமைக்குக் குறுக்கே நிற்கும் திருவாங்கூர் ஆட்சிக்குப் பெரும் கிலியாகவும் அமைந்தது இம்மாநாடு.

மகாநாட்டிற்குத் தமது உடல் நிலைமையும் கவனியாது, அன்போடு வந்திருந்து எழுத்தாளர்களை ஆர்வத்துடன் வரவேற்ருர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள். அவர்கள் எழுந்து நின்று உணர்ச்சியுடன் பேசியது அரியதொரு காட்சியாக இருந்தது.

"திருவிதாங்கூர், நாஞ்சில் நாடு என்று கேட்டவுடன் இதை மலையாள நாடென்றும், இங்குள்ளோரை மலையாளிகளென்றும் பெரும்பாலான தமிழர்கள் தீர்மானித்து விடுகின்றனர். இது சேரநாட்டின் ஒரு பகுதி என்பதை அறியாதார் யார்? சேர அரசர்கள் யாவரும் செந்தமிழ் வேந்தர்கள் அல்லவா? தமிழ்ப்பாடல்களுக்குப் பரிசாக நாடும், ஊரும், ஏன் ஆட்சியும் கொடுத்தார்கள் சேரர்கள்.

"வடநாட்டு ஆரிய மன்னர்கள் தமிழர்களைப் பழித்துக் கூறியபோது சினந்தெழுந்தவன் சேரனு? பாண்டியனு?

'வாய்வாள் ஆண்மையின் வண்டமிழ் இகழ்ந்த
காய்வேல் தடக்கைக் கனகனும் விசயனும் ...

செங்குட்டுவன் தன் சினவலையில் பட்டார்கள் என்று தானே சிலப்பதிகாரம் சொல்லுகிறது? நீங்கள் இந்த நாட்டிலுள்ள கல்வெட்டுகள், செப்பேடுகள் முதலியவற்றைப் பார்ப்பீர்களானல் இது ஓர் தமிழ்நாடு என்பதை ஐயமறத் தெரிந்து கொள்வீர்கள். — இத்தகைய பழந்தமிழ் நாட்டிலே இன்று தமிழ் படும்பாடு அந்தோ! பரிதாபம். தமிழுக்குப் புறக்கணிப்பு. தமிழன் என்ருல் ஏளனம். எழுத்தாளர் பெருமக்களே! இதனை எண்ணிப்பாருங்கள். தமிழுக்கும் தமிழனுக்கும் உள்ள இந்த அவமானத்தைப் போக்குங்கள்"

என்று கவிஞர் கேட்டுக்கொண்டார்.

'பிரசண்ட விகடன்' ஆசிரியர் திரு நாரண துரைக்கண்ணன் தலைமையில் மாநாடு தொடங்கியது. தம் தலைமையுரையில் தமிழின் தொன்மைபற்றியும் அதன் வளர்ச்சி பற்றியும் விரிவாகத்தோழர் நாரண துரைக் கண்ணன் நன்கு விளக்கினார். தற்போது வேகமாக வளர்ந்து வரும் இலக்கியத்தில் புகுந்துள்ள, புல்லுருவிகளான தமிழ்ப் பண்பாடும், ஒழுக்கமும் சிறிதுமில்லாத எழுத்துக்களை அவர் வன்மையாகக் கண்டித்தார்.

"அர்த்தமற்ற கொள்கைகளுக்கும் மூடப்பழக்க வழக்கங்களுக்கும நம் இலக்கியங்களில் சிறிதும் இடந்தரலாகாது. டால்ஸ்டாய், டிக்கன்ஸ் போன்ற இலக்கியகர்த்தாக்கள் தங்களுடைய எழுத்துக்களால் சமுதாயப் பிரச்னைகளைத் தீர்க்க முயன்றிருக்கிறார்கள். இவர்களைப் பின்பற்றியே நாம் இலக்கியத்தின் மூலம் சமுதாயப் பணி ஆற்றவேண்டும்" என்றார்.

எழுத்தாளர்களுக்கு அரசாங்கம் கொடுக்கவேண்டிய ஆதரவு பற்றியும், பொதுமக்களின் கடமை பற்றியும், எழுத்தாளர்கள் தங்கள் கூட்டுறவால் முன்னேறும் விதம்பற்றியும் கூறினார்

பின்னர் திரு ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் திருவாங்கூர்த் தமிழர்களைப் பற்றிப்பேசியது மிகவும் வன்மையாக இருந்தது. இடமில்லாது நெருக்கிக்கொண்டிருந்த கூட்டத்தினர் மிக உற்சாகத்துடன் பேச்சை அனுபவித்தார்கள். பின்பு "தாய்மார்களாகிய உங்களுக்குக் குழந்தையாகிய நான தாலாட்டுகிறேன்' என்ற அவையடக்கத்துடன் 'கலையும் வாழ்வும்' பற்றி திரு. என். எஸ். கிருஷ்ணன் சிரிக்கச் சிரிக்கப் பேசினார். முதல் நாள் மாநாடு பகல் உணவுக்குக் கலைந்தது.

உணவுக்குப் பின் திருவாங்கூர்த் தமிழர் தலைவர் திரு. நத்தானியல் எழுத்தாளர்களுக்கு ஒரு அருமையான சிற்றுண்டியளித்தார்; எல்லாம் பழவகைகள்! மா,பலா,தேன்... ஒரே இனிமை!

பிற்பகல் மாநாட்டுத் தொடக்கத்தில் திரு. சுந்தரம் பிள்ளை அவர்களின் படத்தை திரு. ரா. பி. சேதுப்பிள்ளை திறந்து வைத்தார். அடுத்தாற்போல் கலைஞர் திரு. டி. கே. ஷண்முகத்தின் பேச்சு சுவைநிறைந்திருந்தது. நாடக இலக்கியத்தின் தன்மை பற்றியும் உலகில் அதன் முக்கியம் பற்றியும் சுட்டிக் காட்டினார். தமிழ் நாட்டு முக்கிய தினப்பத்திரிகைகளும், மற்ற வெளியீடுகளும் நாடக வளர்ச்சியில் 'அலட்சிய மனோபாவம்' காட்டுவதைக் கண்டித்தார்.

அடுத்து திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் "பயனுள்ள இலக்கியம்" என்ற பயனுள்ள சொற்பொழிவு நிகழ்த்தினார். சமயத்திற்கு ஏற்ற, நாட்டிற்கு உதவும் எழுத்துத்தான் நமது முதல்நோக்கமாக இருக்க வேண்டும் என்றார் ம. பொ. சி.

மறுநாள் படுவேகத்தில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. முக்கியமான தீர்மானங்கள் நாஞ்சில்நாடு தமிழகத்துடன் சேர வேண்டும் என்பதும், பாரதி பாடல்களுக்கு விடுதலை அளிக்க வேண்டும், தனிப்பட்ட ஒரு சிலரின் சுய நலத்துக்காக அவை பயன் படக்கூடா தென்பதும்தான். தீர்மானங்களை ஆதரித்துப் பலநண்பர்கள் உணர்ச்சியுடன் பேசினார்கள்.

பின்பு சென்ற மாநாட்டுத் தலைவர் திரு. பெ. தூரன் கலைக் களஞ்சியத்தைப் பற்றியும், திரு. சா. கணேசன் தமிழ்எழுத்துக்கள் இருக்க வேண்டிய முறைகளைப்பற்றியும் அழகாகப் பேசினார்கள்.

மாநாட்டின் தொடக்கத்திலும் முடிவிலும் 'இன்பத் தேன் வந்து பாயச் செய்தார்' திரு. டி. கே. ஷண்முகம் தம்முடைய தமிழ் வாழ்த்துப் பாடல்களால்.

புதுக்கோட்டையிலிருந்தும் கோவையிலிருந்தும் பல பத்திரிகை-எழுத்தாள நண்பர்கள் வந்திருந்தார்கள். திரு. திருஞான சம்பந்தம் முக்கிய பங்கெடுத்துக் கொண்டார் மாநாட்டில். பத்திரிகைக் கண்காட்சியைத் திறந்து வைத்து அழகாக விளக்கினார்.

மாநாடு இத்தனை சிறப்போடு அருமையாக நடந்ததற்கு இரு பெரும் கலைஞர்கள் தான்காரணம். கலைவாணர்கள் கிருஷ்ணன், ஷண்முகம் ஆகிய இருவருரையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

அருமையான இடவசதி, உணவு, எழுத்தாளர்களுக்கு வேண்டிய பிற ஏற்பாடுகள்— இவற்றை மிகவும் அன்போடும் கவனத்தோடும் பார்த்துக் கொள்ள ஏற்பாடு செய்திருந்தார்கள். "புத்துயிர்" நாராயணன் அவர்களும் அதிகமாக உழைத்தார்கள்,

முக்கியமான தீர்மானங்களை நடைமுறையில் கொண்டுவருவதற்கும், எழுத்தாளர்களுக்குள் ஒற்றுமையும் பலமும் வளர்வதற்கும் பாடுபட்டு தம்முடைய தலைமையைச் சிறக்கச்செய்வார் திரு. நாரண துரைக்கண்ணன் என்பதில் சந்தேகமில்லை.

உரிமைப் போர்

"மன்னன்"

'பிற்பகல் - கடும் வெய்யில் - வெளியில் நீட்டினால் வெடித்து விடும் உன் தலை!' என்று சபித்துக் கொண்டிருந்தான் "சூரியபகவான்!"

காக்கைகள் 'காகா' என கத்திக் கிடந்தன. மக்கள் 'அப்பாடா!' என்று அயர்ந்து கிடந்தனர்.

தென்னை ஊசலாட மறுத்தது!

நாய்கள் நாக்கைத் தொங்க விட்டன. ஆனால் நடமாடவில்லை.

பசியெடுத்த ஒரு சேவல்! தகிக்கும் வெய்யில் அதன் சிவந்த சிறகின்மீது பட்டுத் தெறித்தது. நீலக்கோடுகள் ஒளி வீசுகின்றன.

சேவல் தனது அருமைத் துணைவியாருடனும் செல்வக் குழந்தையுடனும் இரை தேடி அலைகின்றது!

பசியெடுத்த பாட்டாளிக்குப் பரமனைப்பற்றியோ பகலவனைப் பற்றியோ என்ன கவலை இருக்க முடியும்?

குப்பைமேட்டை ஒருசிண்டுச் சிண்டி, நடுத்தெருவைக் கிறல் போட்டு...நடமாடியது சேவல்.

'அதோ! 'கொக்கரகோ'- பதரடித்தபோது தவறிவிட்ட நெல் மணிகள்! குரக்! குரக்கோ!' என்று பேரொலியெழுப்பி-பெரு நடை போட்டது சேவல்.

பெட்டையும் குஞ்சும் பந்திக்கு முந்திக்கொள்ள, சேவல் பெருந்தன்மையாக விலகி நின்றிருந்தது!

2

சேவலின் பெருமிதம் சில கணங்கள் வரை திடீரென மாறிற்று! மின் விசை பட்டது போல-அது தனதுடலைக்குலுக்கிற்று! வியப்புக்குறி விளையாடிற்று அதன் முகத்தில்!

3

அண்டைத் தெருவிலிருந்து கொண்டை பெருத்த சேவல் அசைந்து வந்தது! சிதறிய மணிகளைச் சிண்டியிருந்த பெட்டையும் குஞ்சும் அதன் கண்ணிற்பட்டன! அவ்வளவுதான்!

'அண்டைத் தெருவார்' அங்கே ஓடோடி வந்தார்.

பசியும்பொறுமையும் போட்டி போட்டன. அதன் மூக்குச் சிவந்தது!

குஞ்சின் மீது ஒருகொட்டு!

பெட்டையின் மீது சிறகால் ஒரு அடி! - கலகம் விளைத்தது!

4

செந்நிறச் சேவலுக்குக் குருதி கொதித்தது!

வெறி!—ஒரே பாய்ச்சல்!

'அண்டைத் தெருவார்' முதலில் அலறினர்-ஆனாலும் பின்னால் பாய்ந்து மின்னல் தாக்குதல் செய்தார்! போர்மூண்டது!

உரிமை ஒரு பக்கம்!

பொறுமை மற்றொரு பக்கம்!

5

களத்தில் இறங்கினர்!

செந்நிறத்தார் முன்னேறுகிருர்.

பின் வாங்கி-வளைந்து போய் நேருக்கு நேர் சந்திக்கிருர் "அண்டைத் தெருவார்"

தன் சூது சாயாது என்று அவர் உணரவெகுநேரம் பிடிக்கவில்லை!

மடல் உரித்த வாழைப் பூப் போல் செந்நிறத்தாரின் கழுத்துச் சிலிர்த்தது! கால்கள் முறுக்கேறின!

அண்டைத் தெருவாரோ கொண்டையை ஆட்டிக்கிளம்பி விட்டார் "மல்யுத்தத்துக்கு!"

செந்நிறத்தார்கொத்துகிருர்!

அண்டைத் தெருவார் காலை நெரிக்கிருர்!

அண்டைத்தெரு அமுக்கப் பார்த்தால், செந்நிறம சிறகாலடிக்கிறது!

6

"அண்டைத் தெரு"வார் அதோ ஓடுகிருர்! திரும்பிப் பார்க்க அவகாசமுமில்லை, தைரியமும் இல்லை!

7

செந்நிறத்தார் 'கொக்கரகோ! கொரக்கரக்கோ!" - பேடிப்பயல் ஓடி விட்டான்! வாடி விருந்து உண்ணலாம்!" என்று வாஞ்சையோடு அழைக்கிருர்!

சிறிய சிரிப்பு-'கோரக்! கோரக்' பெட்டைக் குஞ்சு தனக்குத் தானே சுற்றிச்சுற்றி 'கூங்! குக்கூங்' என்று வெற்றிச்சங்கை ஊதுகிறது!

செந்நிறச் சேவலார் தனது 'உரிமைப்போர்' வெற்றியடைந்தது குறித்து முரசுகொட்டி பவனி வருகிருர்!

OOO

—'செந்நிறத்தார் 'திராவிடத்தார்' என்றோ, —"அண்டைத் தெருவார்" "அவர்கள்" என்றோ கற்பனை செய்யவேண்டாம்!

OOO

கலை உலகம்

பில்ஹணன்

தமிழ்ப் படங்கள் இனி உருப்படவே செய்யாது என்ற நிலை உறுதிபெறும் வகையில் புராணக் குப்பைகளையும், அர்த்தமற்ற ஆபாசக் காட்சிகளையுமே அணிகலன்களாகக் கொண்டு வெளிவந்து கொண்டிருந்த தமிழ்ப்படங்களைக்கண்டுகண்டு மனம் நொந்து 'ஐயோ! தமிழ்ப் படமே!' என்று ஏங்கிய-ஏங்கும் தமிழர்கள் எண்ணற்றவர்கள்.

"என் தமிழர் படமெடுக்க ஆரம்பித்தார்
எடுத்தார்கள் ஒன்றிரண்டு பத்து நூறாய்
ஒன்றிலேனும் உயிரில்லை உணர்வில்லை"

என்று மனம் புழுங்கிப் பாடினார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். அவர் கூறியபடி உயிரற்ற உணர்வற்ற படங்களை எடுத்துக் குவித்துக் கொண்டிருக்கும் தமிழ்ப்பட முதலாளிகளின் கண் முன்னேயே,

"இதோ! உயிருள்ளபடமாய் உணர்வுள்ள படமாய், ஆபாசமற்ற படமாய்க் காதல் மணக்கும் படமாய்க் கலைமிளிரும் படமாய்த் தமிழ்மக்களுக்குத் தருகிறேன்; அந்தப் படத்தைப் பார்த்து அதனை ரசிக்கும் தமிழ் மக்களைக்கண்டு, அவர்களுடைய கலாரசனையைஉணர்ந்து, 'புராணமென்றால்தான் போற்றுவார்கள்' என்ற பணப்பெட்டி வேதாந்தபத்தாம்பசலிக்கொள்கைகளைவிட்டு விடுங்கள் என்று அறவுரை கூறுவது போன்று அமைந்த படம்தான் T. K. S. சகோதரர்களின் பில்ஹணன்.

பில்ஹணன் படத்தைப் பார்ப்பதற்கு முன்னால் பாரதிதாசனின் 'புரட்சிக்கவி' என்ற சிறுகாவியத்தை ஒருமுறையாவது படிக்கவேண்டும் என்பது என் எண்ணம். அப்பொழுதுதான் அந்தப்படத்தை முழுதும்ரசித்ததாகும் என்பது என் திடமான நம்பிக்கை. புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் பொன்னான கருத்துக்களை எல்லாம் படத்திலே புகுத்தி அற்புதமாகச் சிருஷ்டித்திருக்கிறார்கள் இந்தப் படத்தை. இத்தகைய கலைச்சிருஷ்டியை உண்டாக்கிய T. K. S. சகோதரர்களைப் பாராட்டாமலிருக்க முடியாது.

கதாபாத்திரங்கள் ஒவ்வொருவரும் தனது பாகத்தைத் திறம்பட நடித்திருக்கிறார்கள்.

டி. கே. சண்முகம்: ஒரு கவிஞனுக்குரிய பெருமிதமான தோற்றம். சொற்களைப் பிரயோகிக்கும் முறையிலேயே கவிஞனுடைய புலமை புலப்படுகிறது. தத்ரூபமாகத்தன துபாகத்தை நடித்திருக்கிறார். படமென்றால் பாட்டு இருக்கவேண்டும் என்ற நியதிப்படி, பாடி மகிழ்விக்கும் நிலையிலில்லாமல் இயற்கையான உணர்ச்சியோடு இயற்கையிலே எந்த முறையிலே பாடுவார்களோ அந்த முறையில் பாடுகிறார். "நிலவான் ஆடைக்குள் உடல் மறைத்து......" என்ற புரட்சிக் கவிஞரின் பாடலை விருத்தமாக, அற்புதமாகப் பாடும்போது அனைவருடைய ரசனை உணர்ச்சியும் உச்ச நிலையடைந்து உடல்சிலிர்க்கின்றது.

டி. கே. பகவதி: நடிக்கவேண்டிய கட்டம் குறைவு. ஆனால் தனது பாகத்தைத் திறம்பட நடித்து விட்டார்.

எம். எஸ். திரௌபதி: கதாநாயகியின் பாகத்தைக் கச்சிதமாக நடித்திருக்கிறார். படத்தில்நடிப்பிற்கு முதல் ஸ்தானம் இவருக்குத்தான். காதலனுக்காகத் தந்தையிடம் வாதாடும்கட்டத்தில் உணர்ச்சி பொங்குகிறது. "நீதியின்பேரால் கேட்கிறேன்..." என்று கம்பீரமாக எடுத்து "சாதிமதம், அந்தஸ்து இவையெல்லாம் மக்களின் மடமையிலிருந்து தோன்றியவைதான்" என்றுவாதாடி மக்களுக்கொரு நீதி — மன்னனுக்கொரு நீதி இருக்க முடியாது என்று, தன தந்தையிடம் தர்க்கம் பேசும்பொழுது மக்களின் ஆரவாரம் பெருகிவிடுகிறது.

விரசமற்ற முறையிலே கதையோடு தொடர்பு கொண்டதாய் நகைச்சுவை தமிழ் நயத்தோடு மிளிர, நடித்திருக்கிறார் நண்பர் சிவதாணு.

எளிய தமிழிலே, இனிய கருத்துக்களை, உணர்ச்சிபொங்கும் வகையிலே புகுத்தி அற்புதமாகத் தயாரித்திருக்கிறார் வசனத்தை திரு. A.S.A. சாமி. அதிலும் புரட்சிக் கவிஞரின புரட்சிக் கருத்துக்களும் கலந்த வசனம் என்றால் வசனத்தின் பெருமையைப்பற்றி எழுதவும் வேண்டுமா?

பாரதி, பாரதிதாசன், கவிமணி ஆகியோருடைய பாடல்களின் இனிமைபற்றி இயம்ப வேண்டியதில்லை. பாஸ்கரதாசின் மற்றைய பாடல்களிலும் இனிமை சொட்டுகிறது.

டைரக்டரின் திறமையைப் பற்றி ஒரேவரியில் எழுதவேண்டுமானால் "அபாரம்" என்று கூறலாம். அரை நிர்வாண உடையுடுத்தி கட்டியணைத்து, கொஞ்சும்ஆபாசக்கட்டங்களைக் காண்பித்துத்தான் காதல் கட்டங்களை எடுக்கமுடியும் என்ற எண்ணத்திற்கு ஒரு அடி கொடுத்திருக்கிறார் டைரக்டர். இருவருடைய காதல் உணர்ச்சிகளையும் தனித் தனியே தத்ரூபமாகச் சம்பவங்களைக் காட்டியே விளக்குவதில் வெற்றி பெற்றுவிட்டார்.

சில குறைகளும் உண்டு: படத்தின் முற்பகுதி நாடக பாணியிலேயே அமைந்திருக்கிறது. ஆஸ்ரமவாசிகள்—ருத்திராட்சம் விபூதியணிந்து 'ஓம் சக்தி' கீதம்பாடிப் பஜனை நடத்துபவர்கள் பில்ஹணனுக்கு அளிக்கப்பட்டுள்ள தண்டனைக்கெதிராக மக்களைத்திரட்டுவது - பாட்டாளித் தோழனே - உங்கள் உழைப்பு - அதன் பலன் அதை அனுபவிப்பவர்கள் என்பனவற்றைக் கூறி புரட்சி செய்யத் தூண்டுவது நடைமுறைக்குப் பொருந்துவதாக இல்லை. பில்ஹணனுக்கும் மக்களுக்கும் கடைசிவரை எவ்வித தொடர்பும் இல்லாமலிருப்பது, அவருக்காக மக்கள் திரண்டு எழுந்தனர் என்ற உண்மையைப் பலவீனப்படுத்துகிறது.

கவிஞனின் பெருமையைத் தெரியப்படுத்திக்காதலின் கண்ணியத்தை அறிவுறுத்தி, தமிழின் இனிமையைச் சுவைத்துக் காட்டி, சாதிபேதப் பூசல்களைத் தட்டி ஓட்டி, மக்களின் ஆட்சியின மாண்பினை எடுத்துக் காட்டி நம்மை மகிழ்விக்கும் ஒரு கலைவிருந்துதான் T. K. S. சகோதரர்களின் பில்ஹணன்.

—புத்தூர் ரா. நடராசன்



பாரதிதாசன் பரம்பரை

[கற்பனையைப் பற்றித் தம் கருத்தினைக் கவிதையாக்கியுள்ள தோழர் கு. இரவியம் மதுரையைச் சேர்ந்தவர்; பல தமிழ் ஏடுகளில் 'ரவி' என்ற புனைபெயரில் எழுதிவருகிறார். — ஆசிரியர்]

கற்பனை

ஒலியற்ற வேளையிலே, இருள்கூட்டும் வானில்
ஒளிவீசித் துடிக்கின்ற பலவெள்ளி நடுவே
குலவுகின்ற எழிற்கன்னி இன்முகத்தி லெல்லாம்
குளிர்நகையைத் தெளிக்கின்ற வெண்ணிலவின் ஊடே
உலவுகின்ற உளத்தினிலே சிந்தனைகள் நடுவே
ஊடுருவிப் பாய்கின்ற எண்ணஒளி தானே
உலகிடையே காவியமாய்ச் சிற்பமதாய் மாறும்!
உயிரோட்டம் கொள்கின்ற ஓவியமாய் மின்னும்!

வாசமுல்லை மலருவதை-வண்டிருந்து பாடும்
வடிவத்துக் காட்சியினை வடிக்கின்ற கலைஞன்
பாசமிகும் உள்ளத்தின் பண்ணொலியாய் மாறும்!
பருவத்தைக் கண்டவுடன் பட்டுவிட்ட மரங்கள்
ஆசையுடன் தளிரிலைகள்-ஆட்டிநிற்றல் போல
அரியதொரு கற்பனையின் உறவுதனைக் கூடி
வீசுகின்ற தென்றலினும் இனியதொரு சுவையை
மீட்டுகின்ற கவிதைகளாய்க் கலைக்கரத்தில் மின்னும்!

தேனுண்டு மலருண்டு வண்டுகளும் அண்டும்
தெவிட்டாத கற்பனைகள் கலைகாட்டும் தேனே!
வேனிலிலே மணம்வீசும் சோலையிலே இன்ப
வேய்ங்குழலில் பண்ணுடனே மெல்லியர்களோடு
மேனிதொட்டுக் காண்கின்ற இன்பத்தைப் போன்று
மெய்யான கலையின்பம் கண்டிடவே வேண்டின்
வானிடையே நீந்துகின்ற உளமலர்ச்சி வேண்டும்!
வாராத இன்பங்கள் வையமதில் உண்டோ?

தமிழ்

தமிழர் மறுமலர்ச்சி இயக்கம் தோன்றிய பின் தமிழில் வரும் நூல்களில் ஒரு பெரும் பகுதி நேரடியான மொழிபெயர்ப்பாகவும், மற்றொரு பகுதி மறைமுகமான தழுவலாகவும் இருந்து வருகிறது. இவற்றிலும் சற்று தொலைப்பட்ட இரவல் சரக்குகளும் இரவல் கருத்துக்களும் வேறு உண்டு. மறு மலர்ச்சிக்கு மொழிபெயர்ப்புத் துறை மிக இன்றியமையாத உறுப்பேயாயினும் அது அம் மறுமலர்ச்சிக்கு உதவும் கருவியேயன்றி மறுமலர்ச்சியாகவோ மறுமலர்ச்சி இலக்கியமாகவோ ஆய்விடாது. மொழிபெயர்ப்பு என்ற முறையில் கூட, தமிழ்ப் பண்பாட்டின் பின்னணித் திரையில் அப்பண்பாட்டில் பொருள் பெயர்த்துத் இட்டப்பட்டால் அன்றி அது பயன் தராது. இந்நிலையில் நேரடியான தமிழ் வளர்ச்சியில் தமிழ்ப் பண்பாடு அடிப்படையான தாயக உறுப்பாயிருத்தல் இன்றியமையாதது என்பதை வற்புறுத்த வேண்டுவதில்லை.

அறிவுக் களஞ்சிய முயற்சி ஒரு நாட்டின் தலைசிறந்த முயற்சியாகும். அது எளிதில் செய்து முடிக்கக்கூடிய பணியன்று. புலவர்கள் புலமை முழுமையையும் அதில் கொட்டியாக வேண்டும். நாட்டு மக்கள் நாட்டார்வம், மொழிபார்வம், பண்பாட்டார்வம் ஆகியவை அத்தனையையும், அதில் சொரிந்தாக வேண்டும். அத்துடன் நடுநிலை ஆராய்ச்சியாளர் நடுநிலைச் செம்மனத்தால் அது தெளிவு பெறவும் வேண்டும். இத்தனை அரும்பாடு பட்டடைய வேண்டிய பெரும் பணியில் மேற்கூறிய மொழிபெயர்ப்புக்கு இடமுண்டானாலும் அத்துறை எளிதாயிருப்பது காரணமாக அரைகுறைத் தமிழறிஞர்களும் அரைகுறைத் தமிழ் முனிவர்களும் போலி ஆராய்ச்சியாளர்களும் அப்பணியை மேற்கொண்டு அதனை முற்றிலும் மொழிபெயர்ப்பாக்கி விடும் இடர்நிலை ஏற்பட்டு விடலாகாது. ஏற்பட்டு விடின் தோட்டத்தில் பாதிக்கு மேல் கிணறான கதையாய் விடும்.

இவ்விடர் நிலைக்கு இடம் செய்யும் சூழ்நிலைகள் இன்று மிகுதி. ஆங்கிலம் முதலிய மொழிகளில் பெரிய அளவில் அறிவுக் களஞ்சியங்கள் எழுதிக் குவிக்கப்பட்டுள்ளன. அவை ஆங்கிலம் முதலிய மொழிக்ள் பேசப்படும் நாடுகளின் சிறப்பு வேண்டுதல்களுக்கிடையே அமைந்தவை. அவற்றை அப்படியே தமிழில் மொழிபெயர்த்து விட்டு அதனைத் தமிழ் அறிவுக் களஞ்சியம் என வெளியிட்டு விடக்கூடும் என்ற அச்சத்திற்கு இடமில்லாமலில்லை.

தமிழ்ப் பண்பில் சற்று மாறுபட்டுப் போன அயல் திராவிட

அறிவுக் களஞ்சியம்

கட்டுரையாளர்: அறிஞர் கா. அப்பாத்துரை

மொழி நாடுகளைவிடத் தமிழகத்திலேயே இவ்விடையூறு மிகுதியாயுள்ளது என்றுகூடக் கூறலாம். ஏனெனில் மலையாள தெலுங்கு கன்னட மொழிகளில் அகர வரிசைகள் எழுதியவர்கள் அம்மொழியில் உலக வழக்கினும் செய்யுள் வழக்கிலும் உள்ள பெருவாரியான சொற்களை அவ்வத் திராவிட மொழிச் சொற்களாகவே திரட்டினாராயினும் அம்மொழியில் வழங்காத வட சொற்களைத் தேடித் திரியவில்லை. தமிழிலோ இடைக் காலத்திலேயே சொல் தொகுதி எழுதியவர் பலர் அத்தொகுதியை விரிவுபடுத்தும் முயற்சியில் தமிழ்ச் சொற்களைத் தேடும் தொல்லையை ஒழித்து வடமொழி நிகண்டுகளை அப்படியே கொண்டு வந்து சேர்த்துள்ளனர். அறிஞர் வையாபுரிப் பிள்ளையவர்கள் கண்டெடுத்து வெளியிட்டுதவிய கயா நிகண்டு இவ்வாறு தமிழில் எழுதப் பட்ட வடமொழி நிகண்டுகளில் ஒன்றாகும்.

தமிழில் அகர வரிசைகள் எழுத முன்வந்த பலர் தெரிந்தும் தெரியாமலும், இந்நிகண்டுகளை மேற்கோளாகக் கொண்டனர். நேரிடையாக மொழியாராய்ச்சி செய்து அச்சொற்கள் உலக வழக்கிலோ இலக்கிய வழக்கிலோ இடம் பெற்றனவா என்று தேர்ந்து கொள்ளும் நேரிய அறிவியல் முறையை அவர்கள் மேற்கொள்ள இன்று வரை தவறி விட்டனர். சென்னை அரசியலார் முயற்சியால் அறிஞர் வையாபுரிப் பிள்ளை தலைமையில் பெருஞ் செலவில் தொகுக்கப்பட்ட தமிழ்ப்பேரகர வரிசை (*Tamil Lexicon*) மற்றெல்லா அகர வரிசைகளிலும் இவ்வகையில் பேரளவில் பிழைபாடுடையதாகும். தற்போது களஞ்சிய முயற்சியும் தெரிந்தோ தெரியாமலோ இதே வகைக் குழுவினர் கைப்படுமானால் இதே வகைப் பிழைபாடுடையதாய் விடும் என்பதற்கு ஐயமில்லை.

பிறமொழியில் எழுதப்பட்ட அறிவுக் களஞ்சியங்கள் ஒன்றையோ பலவற்றையோ தமிழில் மொழிபெயர்த்து விட்டால் அது அறிவுக் களஞ்சியமாய் இருக்கலாம். தமிழில் எழுதப்பட்ட அறிவுக் களஞ்சியமாகவும் இருக்கலாம். ஆனால் அது தமிழ் அறிவுக் களஞ்சியமாகமாட்டாது. பல நாட்டு மொழிகளின் அறிவுக் களஞ்சியங்களின் தொகுப்பாக அது அமைந்தால்கூட அது தமிழில்

எழுதப்பட்ட பல நாடுகளின் அறிவுக் களஞ்சியமாகக் கூடுமேயன்றித் தமிழறிவுக் களஞ்சியமாகவோ தமிழுலக அறிவுக் களஞ்சியமாகவோ அமைய முடியாது. அறிவுக் களஞ்சியத்தைத் தமிழ் அறிவுக் களஞ்சியமாக்கக் கூடிய சிறப்பு, தமிழ்ப் பண்பாடு ஒன்றினுக்கே உண்டு. ஆகவே அப்பண்பாட்டடிப்படையில் களஞ்சியப் பணி எத்தகைய கூறுகளை உடையதாயிருக்க வேண்டும் என்பதைத் தொகுத்துரைப்போம்.

முதலாவதாக, அறிவுக் களஞ்சியத்தின் மொழி நடை இலக்கியச் பண்பும், எளிமையும், கூடிய மட்டும் ஒருங்கே அமையப் பெற்ற தூய தனித் தமிழ் நடையாயிருத்தல் வேண்டும். இங்ஙனமிருந்தாலன்றி அது தமிழ் வளர்ச்சிக்கும் தமிழர் வளர்ச்சிக்கும் உதவுவதற்கு மாறாக, அயல் மொழி வளர்ச்சிக்கும் அயல் மொழியாளர் வளர்ச்சிக்கும் மட்டுமே உதவுவதாக முடியும்.

இரண்டாவதாக, அறிவுக் களஞ்சியத்தின் பரப்பில் தமிழ் தமிழிலக்கண இலக்கியங்கள், கலைகள், தமிழக நிலவியல். வாழ்க்கைச் செய்திகள், அறிவியல்கள், வரலாறுகள் ஆகியவற்றுக்கு நடு நாயகமான இடமும்சிறப்பளவும் தருவதாயிருத்தல் வேண்டும். தமிழகத்துக்கு அடுத்தபடியாகத் தமிழ் சார்ந்த திராவிட மொழிகள், நாடுகள், மக்கள், ஆகியவர்கள் பற்றிய செய்திகளும் அதன் பின் அம்முறையே இந்திய மாநிலச் செய்திகளும், ஆசியா, ஆப்பிரிக்கா, ஆஸ்ட்ரேலியா, அமெரிக்கா முதலிய பண்டைய கீழ் நாடுகளின் செய்திகளும் ஐரோப்பாவின் பண்டைய நாகரிகச் செய்திகளும் இறுதியில் மட்டுமே தற்கால மேலை நாட்டுச் செய்திகளும் அமைந்திருத்தல் வேண்டும். அறிவியல் துறையில் மட்டுமே மேனாட்டுப் பகுதி முதன்மை பெறுவதற்குரியது.

மூன்றாவதாக, அறிவுக் களஞ்சியம் ஆராய்ச்சியாளர் முடிவுகளாகிய மெய்யறிவுகளையும் பகுத்தறிவாராய்ச்சித் துறைகளையும் வகுத்துரைக்க வேண்டுமேயன்றி இவற்றுக்கு மாறான பழங்கதைகளையும் மூடநம்பிக்கைகளையும் ஆதரிப்பவையாக அமையக்கூடாது. இன்றியமையாது அவற்றைக் குறிக்க வேண்டிய இடத்தில் அவற்றை அறிஞருலகம் ஏற்காத செய்திகளென்ற குறிப்புடன் தரவேண்டுமேயன்றி அவையே ஆராய்ச்சி முடிவுகள் என்ற மயக்க உணர்வை உண்டு பண்ணக்கூடாது.

அறிவுக் களஞ்சிய வகையில் முதன் முயற்சியாகக் கொள்ளக் கூடிய அபிதான சிந்தாமணியில் அதன் ஆசிரியர் பகுத்தறிவுக்கொத்த புதுச்செய்திகளைச் சேர்க்க முனைந்துள்ளாராலும் பழம் போக்குகளைத் துணிந்து மாற்றத் தயங்கியிருப்பது காணலாம். எடுத்துக்காட்டாகப் பல்லவர், பாண்டியர், ஆகியவரது வரலாற்றுச் செய்திகள் பலவற்றைக் கூறும் ஆசிரியர் அதே மூச்சில் அவற்றிலிருந்து வேறுபாடறியக் கூடாத முறையில் புராணச் செய்திகளையும் எத்தகைய பகுத்தறிவுக் குறிப்புரையும்

இன்றித் தந்துள்ளனர். சமய விழாக்கள், சமயத்துறைப் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றுக்கு உரந்தரும் வகையில் அறிவுக்கொவ்வாத கதைகள் இடைக்காலத்திலும் இக்காலத்திலும் போலி அறிஞர்களால் எழுதப்பட்டு வருகின்றன. தமிழர் பண்பாட்டை அழிக்க ஏற்படும் இத்தகைய சழக்கர்களுக்குக் கூடியமட்டும் அறிவுக் களஞ்சியம் சிறப்புத் தரக்கூடாது.

இறுதியாக, அறிவுக் களஞ்சியத்தில் விஞ்ஞான கலைச் செய்திகளையும் குறிப்பிடுகையில் புதிய கலைச் சொற்கள் ஆக்குமுன், பழங்கால இலக்கிய இலக்கண நூல்களில் வழங்கிய அருஞ்சொற்களையும் நாட்டுப்புறங்களில் தொழிலாளரும் பிறநாட்டு நாகரிகத் தொடர்பற்ற பழங்குடி மக்களும் வழங்கும் உயிர் உள்ள சொற்களையும் அறிஞர் தேடித் தரல் வேண்டும். புதுச்சொற்கள் கூடியமட்டும் தனித் தமிழ்ப் பண்பு, நாட்டுப் பேச்சு வழக்கு ஆகியவற்றுடனும் பழய இலக்கிய வழக்குகளுடனும் பொருந்துவனவாயிருத்தல் வேண்டும்.

இப்பண்புடன் யாவும் அமையப் பெற்றாலன்றி அறிவுக் களஞ்சியம் தமிழ் நாட்டுக்கும் தமிழ்ப் பண்பாட்டுக்கும் தமிழுலக வளர்ச்சிக்கும் உதவும் தமிழ் அறிவுக் களஞ்சியமாய் இயலாது என்பது உறுதி.

கைதி

டி. கே. சீனிவாசன்

“கல்யாணம் ஆகாதபெண்ணே!”

அந்த அடிகளைப் படித்ததும் லலிதாவின் மனம் அதை எழுதியது யார் என்று பார்க்கத் தூண்டியது. புத்தகத்தின் மேலட்டையைப் பார்த்தாள். “பாரதிதாசன்” என்று பெரிய பெரிய எழுத்துக்களில் அச்சிடப்பட்டிருந்தது. தன்னைப்பற்றி அக்கறை எடுத்துக்கொண்டு கவிதை எழுதிய அந்தக் கவிஞருக்கு வணக்கம் செலுத்தினாள். கவிதையைப் படிக்கத் தொடங்கினாள். நகரும் கண்களோடு கூடச் சேர்ந்து நகர, மனம் மறுத்து விட்டது.

திடீரென ஒருநாள் லலிதா பருவமடைந்து விட்டாள்! அவள் உடலில் ஏற்பட்ட மாறுதல், அதை அவளுடைய பெற்றோர் கொட்டு மேளத்தோடு விளம்பரம் செய்தது, பத்திரிகையில் வெறும் “லலிதா”வோடு ‘தேவி அம்மாள்’ என்று இரண்டு வார்த்தைகளைக் கூடச் சேர்த்து அச்சடித்தது அத்தனையும் சேர்ந்து அவளை இன்பத்தில் ஆழ்த்தின. அவற்றிற்கு மேலாக அவளைப் பார்க்க வந்துபோன பெண்கள் எப்போதுமில்லாத புது மாதிரியில் அவளுடன் பேசியதும் பழகியதும் தனிப்பட்ட ஒரு பெருமையை அவளுக்களித்தன.

நாட்கள் ஒவ்வொன்றாக மறைந்தன. வந்திருந்த உறவினர்களும் ஒவ்வொருவராக ஊர் திரும்பினர். அடிக்கடி அவள் அலங்காரங்களை மாற்றி மாற்றிப் பார்த்துக் களித்த அவள் தாயும் அலுத்து ஓய்ந்து விட்டாள். அப்போது தான் தன்னைச் சூழ்ந்திருந்த தனிமையை லலிதா உணர்ந்தாள். மேஜை மேல் அடுக்கி வைக்கப்பட்டிருந்த புத்தகங்களை எல்லாம் புரட்டிப் புரட்டிப் படித்தாள். எல்லாம் அவளுக்கு மனப்பாடமாகிவிட்டன. அவள் ‘பெரிய மனுஷி’யாவதற்கு முதல் நாளிரவு தான் வெகு நேரங் கண் விழித்து விட்டுக் கணக்குகளை எல்லாம் சரியாகப் போட்டு முடித்திருந்தாள். அவற்றை வாத்தியாரம்மாவிடங் காட்டி நல்ல பெயர் வாங்க முடியாமற் போனது வேறு அவளுக்கு ஏக்கத்தைக் கொடுத்தது.

மெள்ள மெள்ளப் பதினைந்து நாட்கள் ஒவ்வொன்றாக ஊர்ந்து சென்றன. அன்று காலையில் வெளியிலிருந்து “லலி, லலி” என்று லீலா கூப்பிடுங் குரல் கேட்டது. அவளை வரவேற்க எழுந்தோடி வந்தாள். அறை வாயிலைத் தாண்டப் போகும்போது எங்கேயோ இருந்து ஓடிவந்து வெட்கம் உள்ளே புகுந்து கொண்டது.

“வாம்மா லீலா! உள்ளே வாயேன்” என்று லீலாவை

லலிதாவின் தாய் வரவேற்ருள்.

"ஏம்மா லலி, ரொம்ப நாளாக ஸ்கூலுக்கு வரலே? டீச்சர் கேட்டுக்கிட்டு வரச் சொன்னுங்க" என்று லிலா தான் வந்த காரியத்தைச் சொன்னுள்.

"அம்மா லலிதா! லிலா வந்திருக்குப்பாரு" என்று அழைத்தாள் லலிதாவின் தாய். மனதைத் திடப்படுத்திக் கொண்டு லிலாவின் எதிரே வந்து நின்ருள் லலிதா. நகைகளின் சுமைதாங்கி போலத் தன் முன்னே நடந்து வந்த லலிதாவை லிலா ஆச்சரியத்தோடு உற்றுப் பார்த்தாள். லலிதாவின் மனதிற்குள் ஏதோ ஒன்று என்னவோ செய்தது. மலர்ந்த கண்களால் தன் மகளை ஆசையோடு பார்த்துக் கொண்டே, "அது இன்னமே வெளியே போகக்கூடாது" என்று லலிதாவின் தாய் பதில் சொன்னுள்.

அப்போதுதான் அவளிடத்தில் புகுந்திருந்த வெட்கம் விட்டுப் பிரிந்தது.

"கொஞ்சநேரம் உள்ளே வந்துட்டுப் போயேன் லிலா" என்று வருந்தி அழைத்தாள்.

"நான் மாட்டேன் அம்மா. ஸ்கூலுக்கு நேரமாயுடுச்சு. டீச்சர் கோவிச்சுக்குவாங்க" என்று சொல்லி வேகமாக வெளியே நடந்தாள் லிலா!

ஏக்கத்தோடு அவள் சென்ற திக்கையே பார்த்துக்கொண்டு அங்கேயே வெகுநேரம் நின்று கொண்டே இருந்தாள் லலிதா. பசப்புக்காரி கமலா, சிரிப்புக்காரி பத்மா, கோள் சொல்லிக் கோமளம் இவர்கள் ஒவ்வொருவராக அவள் நினைவில் தோன்றினர். இவள் பெரிய மனுஷியான செய்தி அவர்களில் எவருக்கும் தெரியாது. இந்தக் குறும்புக்காரி லிலா வேறு தன்னைப்பற்றி அவர்களிடம் ஏதாவது சொல்லி வைக்கப் போகிருள். அவர்கள் அப்போது என்ன நினைப்பார்களோ? தான் மட்டும் அப்போது அங்கே இருந்தால்......!

சமையலறையிலிருந்த தன் தாயை நோக்கிப்போனுள். ஏதோ தன் வேலையிலிடுபட்டிருந்த அவளிடம்,

"அம்மா! நான் பள்ளிக்கூடம் போறு என்னும்மா?" என்று கெஞ்சுங் குரலில் கேட்டாள்.

"ஆமாம்மா, அது ஒண்ணுதான் பாக்கி. 'நாலு பேரு' பாத்தா என்ன சொல்லுவாங்கோ?" என்று பதில் சொல்லி விட்டு உலை வைப்பதில் ஈடுபட்டாள் அவள். "பத்மா கூடப் பெரிய மனுஷியானவள் தானே, அவள் மட்டும் பள்ளிக்கூடம் வருகிருளே" என்று எதிர்த்துக் கேட்டு விட்டுப் பதிலை எதிர்பார்த்தாள் லலிதா.

"அவுங்கள்ளாம் பணக்காரவங்க. பணம், பேசறவங்க வாயை அடைச்சுடும். நம்ப அப்படியெல்லாம் நடக்க முடியுமா அம்மா?" என்று பரிவோடு தன் மகளைப் பார்த்துச்

சொல்லி விட்டுத் தன் காரியத்தைக் கவனிக்க ஆரம்பித்தாள்.

பேசாமல் திரும்பித் தன் அறைக்குள் வந்து உட்கார்ந்தாள். அழுகையும் ஆத்திரமும் பிறிட்டுக்கொண்டு வெளி வந்தன. "யார் அந்த நாலு பேர்? அவர்கள் என்ன சொல்வார்கள்? அவர்கள் ஏதுஞ் சொன்னால் என்ன ஆகும்?" ஒன்றுமே அவளுக்கு விளங்கவே இல்லை. அந்த அறையைப் பெருக்க வேலாயி உள்ளே நுழைந்தாள். அவளைப் பார்த்ததும் லலிதாவின் துக்கம் அதிகப்பட்டது. வேலாயி கூடப் "பெரிய மனுஷி"யானவள் தான். இன்னும் எவனுக்கும் வாழ்க்கைப்படவில்லை. ஆனால் வெளியே போய் வந்துகொண்டுதானிருந்தாள்.

"ஏன் வேலாயி நான் வெளியே போகக் கூடாது?" என்று மெள்ள ஆரம்பித்தாள்.

"அடி ஆத்தே! நீ வெளியே போனா 'நாலு பேரு' என்னு சொல்லுவாங்க?" என்று சொல்லி விளக்குமாற்றைக் கீழே போட்டு விட்டுக் கன்னத்தில் கையை வைத்துக் கொண்டாள் வேலாயி.

"நீ மட்டும் வெளியே போறியே?" என்று அவளுடைய அந்த முக பாவத்தை அழித்தொழித்தாள் லலிதா.

"நாங்கள்ளாம் ஏழைங்க. அதெல்லாம் பார்த்தா வயத்துப் பொளப்பு நடக்குமா அம்மா" என்று ஏழ்மையின் தோற்றம் வார்த்தைகளில் தொனிக்கப் பதில் சொன்னாள் வேலாயி.

பணக்காரி பத்மா—ஏழை வேலாயி! இரண்டு பேரும் வெளியே போகலாம். அந்த "நாலு பேர்" அந்த இருவரையும் பார்த்து ஏதுஞ் சொல்வதில்லை; ஆனால் 'அவள்' மட்டும் எப்போது வெளியே வருவாள், ஏதாவது சொல்லலாம் என்று காத்துக் கொண்டே இருந்தனர்!

மத்தியானம் அவள் தாய் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தாள்.

வெளியே கதவு தட்டும் சத்தம் கேட்டது. எழுந்துபோய்த் திறந்தாள். தெருவின் பெரும் பாகம் அவள் கண்களில் தெரிந்தது. அடுத்தவீட்டு அம்மாள் உள்ளே நுழைந்தாள். எதிர் வீட்டு உருவம் நிழலாகப் படிந்து வீதியின் முக்கால் பாகத்தை அடைத்துக்கொண்டிருந்தது. இன்னும் சற்று நேரத்தில் அந்த நிழல் இவர்கள் வீட்டு வாயிலைவந்து முத்தமிடும். அதற்குள் உள்ளே வந்த அம்மாள் வேகமாகக் கதவை மூடித் தாழிட்டாள்.

"தெருப்பக்கம் நிக்கக் கூடாதம்மா, நாலுபேரு கண்ணிலே பட்டா என்ன நினைப்பாங்க?" என்று சொல்லிவிட்டு உள்ளே புகுந்தாள் அந்த அம்மாள்.

மறுபடியும் அந்த "நாலு பேர்!" அவள் பார்த்தே இராத, கல்நெஞ்சம் படைத்த மடையர்

கள்! இவள் வெளியே போனால் அவர்களுக்கு என்ன? விரைந்து தன் அறைக்குள் நுழைந்து கதவைத் தாழிட்டுக் கொண்டாள்.

அவள் கால்களில் விலங்குகள் எதும் பிணைத்திருக்கப்படவில்லை. இருந்தாலும் வெளியே போக முடியாது. தொண்டை ஒன்றும் கம்மலாக இல்லை. உரத்துப் பேசினால் உடனுக்குடனே தடை உத்தரவு போட்டாள் அவள் தாய். நம்பத்தகாதவள் என்று அவளைச்சுற்றி வேலி போட்டிருந்தார்கள். வேலியைத் தாண்டி எட்டிப் பார்க்கக்கூட அனுமதி தர மறுத்தார்கள். அவள் ஆதரவோடு தாங்கிக் கொள்ள அந்தத் தலையணை ஒன்றுதானிருந்தது. அதற்கும் பேசும் சக்தியிருந்தால் அந்த "நாலு பேரை"ச் சுட்டிக் காட்டுமோ என்னவோ?

அன்று மாலையில்தான் அவளுடைய அப்பா அந்தப் புத்தகத்தைக் கொண்டு வந்தார். கவிதைகள் என்றிருந்தவுடன் அவளுக்குப் படிக்கப் பிடிக்கவே இல்லை. இருந்தாலும் வேறு வழியில்லையே என்று வேண்டா வெறுப்போடு படித்தாள். அவள் எதிர்பார்த்ததுபோலில்லாமல் ஒவ்வொரு கவிதையும் தெளிவாகப் புரிந்தன.

ஓடி ஓடிக் களைத்துப் போன குதிரை கடைசியில் லாயத்துக்குத் திரும்புவதுபோல அதுவரை பழைய நிகழ்ச்சிகளை எல்லாம் ஒவ்வொன்ருகப் பரிசிலனை செய்த மனம் கடைசியில் ஒரு நிலையில் வந்து நின்றது. கண்களும் அதைத் துணைக்கழைத்துக்கொண்டு அந்தக் கவிதையைத் தொடர்ந்து படிக்க நகர்ந்தன.

"விளையாடுவாய் துள்ளி விளையாடு மான்போல்" என்ற அடிகளைப் படித்ததும் அதுவரையில் அவளிடையே நிறைந்திருந்த சோர்வும் சலிப்பும் பறந்து மறைந்தன. செழிப்பான அவள் உடல் புத்துணர்ச்சி பெற்றது. இரத்தத்தில் நிறைந்து குவிந்திருந்த சிவப்பு அணுக்கள் ஜீவசக்தியைக் கிளப்பி விட்டன. ஒரு முறை எழுந்து குதிக்கவேண்டும் போலிருந்தது. ஆனால், அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த அவளுடைய அப்பாவும் அம்மாவும் கண் விழித்துக் கொண்டால்......? திறந்திருந்த இமைகளை இழுத்து மூடினாள்.

விழிக்கும் இமைக்கும் இடையே கோடுபோலத் தோன்றி எழுத்துருப்பெற்றது அந்தக் கவிதை. ஒவ்வொரு அடியாக அவள் இதயத்தில் ஆழமாகச் சென்றுபதிந்தது. புகைந்துகருகிப் போயிருந்த சமையலறை, குகைபோலச் சிறுத்திருந்த அவளுடைய அறை, இவைகளுக்குள்ளே அவள் உடலைச் சிறைப்படுத்தி வைத்திருந்த அந்தச் சிறுவீடு - இவைகளைத் தாண்டி அவள் எண்ணங்கள் எங்கேயோ ஓடின. மெள்ள எழுந்து தலையைநீட்டி வெளியே பார்த்தாள். அப்பாவும் அம்மாவும் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தார்கள், அடிமேலடி வைத்து நடந்து கதவைத் திறந்து வெளியே வந்தாள்.

"பழத்தோட்டம் அங்கே, தீராப் பசிகாரி இவ்விடத்தில்" என்று

அந்தப் பத்துப் பதினைந்து நாட்களும் பார்த்துப் பார்த்து ஏங்கிய அந்தத் தெரு! இருள் நிறைந்த இரவில் அவளைப் போல் கண்விழித்துக்கொண்டிருந்த மின்சார விளக்குகள். "கண்ணாடிப் பாத்திரத்தைக் கல்தரையில் வைப்பதுபோல்" ஒவ்வொரு அடியாக எடுத்து எடுத்து வைத்தாள். யாராரோ நடந்து போயிருந்த காலடிச் சுவடுகள் மண்ணிலே பதிந்து கிடந்தன. ஒரு வீட்டின் முன்னால் போடப்பட்டிருந்த கோலம் அழிந்து அலங்கோலமாக இருந்தது. குளிர்ந்த காற்று அவள் உடலைத் தழுவிக் கொண்டிருந்தது. ஏதோ ஒரு மகிழ்ச்சி இதயத்துக்குள்ளிருந்து எழுந்து அவளை முன்னால் தள்ளிக்கொண்டே போனது.

அந்த வீதியின் மறு கோடி வரை நடந்துபோனாள். மூலை திரும்பும்போது வெளிச்சம் கண்ணில் பட்டது. மூலை வெற்றிலை பாக்குக்கடை இன்னும் மூடாமல் திறந்திருந்தது. இருளில் மறைந்து நின்று எட்டிப் பார்த்தாள். யாரோ சிலர் அங்கே நின்று கொண்டிருந்தனர். கவனமாக எண்ணிப் பார்த்தாள் அவர்களை. ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு!

இதயம் அடித்துக் கொண்டதைப் பார்த்தால் தெறித்து விடும் போலிருந்தது. திக்குத் தெரியாமல் எங்கெங்கோ தாறுமாறாக ஓடியது இரத்தம். சிதறிச் சென்ற எண்ணங்களை எல்லாம் தேடிப்பிடித்து ஒன்று சேர்க்க முயன்றது மூளை. அவளைச் சித்திரவதை செய்து துடிக்கத் துடிக்க விளையாட்டுக் காட்டி வேடிக்கை பார்க்கும் அந்த நாலுபேர்! கண்ணுக்குத் தெரியாமலே எங்கேயோ இருந்து அவளைக் கடுங்காவலில் வைத்திருந்த அந்த நாலு பேர்! எதிரே நின்று கொண்டிருந்தனர். வீசியெறியப்பட்ட கல் வேகமாகத் தாக்கவரும்போது உடலை வளைத்து அடிபடாமல் தப்புவதைப்போல் பேசாமல் வந்த வழியே திரும்பினாள்.

"விடிஞ்சு எத்தனை நாழியாச்சு? எந்திரி அம்மா" என்று தட்டி எழுப்பினாள் வேலாயி. கண்ணைக் கசக்கிக் கொண்டு விழித்துப் பார்த்தாள் லலிதா. மறுபடியும் அதே சிறை! இதயத்தில் பூத்துக் குலுங்கி மலரும் தருவாயிலிருந்த மகிழ்ச்சியோடு அதை ஒருமுறை சுற்றிலும் பார்த்தாள். அப்போது தான் அவள் தாய், "என்னம்மா இப்படிப் படுத்துத் தூங்கிறை, போறவுட்டுலே "நாலு பேரு" என்ன சொல்லுவாங்க" என்று சொல்லிக்கொண்டே உள்ளே நுழைந்தாள்.

தாங்க முடியாது, வெளியே ஓடிவந்த சிரிப்பைத் தடுக்க முடியாமல் "கலீர்" என்று வெளியே கொட்டினாள். உரத்த குரலில்,

கோலத்தினைக் கோய்வதுண்டோ
—பெண்கள்
கோய்யாப் பழக்கூட்டம் என்றே
உரைப்பாய்

என்று தெளிவாகப் பாடினாள் ஒன்றும் புரியாமல் திகைத்து நின்ற தன் தாயையும் வேலாயியையும் குறும்பாகப் பார்த்துக் கொண்டே துள்ளிக் குதித்துப் பல்விளக்க ஓடினாள் லலிதா தேவி அம்மாள்!

இரண்டு பரிசுகள்

மு. அண்ணாமலை

கவிதைச் சுவை காணல் தமிழ் நாட்டில் மிகக் குறைவு! பத்து ஆண்டுகட்கு முன்னிருந்த பத்திரிகை ஆசிரியர்களுக்குக் கவிதையின் அருமை தெரியாது; அதை அனுபவிக்கவும் தகுதி பார்த்து வெளியிடவும் அவர்களிடம் திறமை இல்லை.

தமிழ்நாட்டில் கவிதைச்சுவை மக்களிடம் உண்டாவதற்கு வசதியான சாதனம் இப்படிப் பாழ்பட்டுக் கிடந்தது. ஆனால் இன்று அந்த நிலைமை பெரும்பாலும் இல்லையென்றே சொல்லலாம். ஆனால், பத்திரிகை ஆசிரியர்கள் முன்னேறி விட்டார்கள் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் அவற்றின் பிழைகளை நீக்கிச் செப்பன் செய்து வெளியிடக் கூடிய திறமை இன்னும் அவர்களிடம் இல்லை.

இந்த நிலையில் பொன்னி, சிறந்த பணியைத் தமிழ்நாட்டுக்குச் செய்திருக்கிறது. ஒவ்வொரு இதழிலும் ஒரு இளங் கவிஞரைப் "பாரதிதாசன் பரம்பரை" என்ற தலைப்பில் அறிமுகம் செய்து கொண்டு வருகிறது.

அப்படி அறிமுகம் செய்யப் பெற்றவர்களிலே இரண்டு கவிஞர்கள் தமிழகத்திற்கு அளிக்கும் இரண்டு நூல்கள் மலரும் தமிழகம் கொய்யாக் காதல் என்பன.

மலரும் தமிழகம்:—

தேவாரத்தையும் திருவாசகத்தையும் படிக்கும்பொழுது உள்ளம் அவற்றோடு உருகி இடையறு இன்பம் துய்க்கிறது என்று சொல்லக் கேட்டிருக்கிறேன்.

அதைப்போல் சாமிபழனியப்பரின் மலரும் தமிழகத்தைப் பார்க்கும்தோறும், படிக்கும் தோறும் மனிதன் உணர்ச்சிவசமாகி விடுகிறான்; முதுகெலும் பொடிந்த திராவிட இனத்திற்கு முதுகெலும்பு முளைக்கிறது. சுருங்கச் சொன்னால், இந்நூலைப் படிப்பவன் "எடு வாளை, தொடு போரை" என்ற நிலைக்கு வந்துவிடுகிறான்.

கற்பனை அழகும், உவமை அழகும் இந்த நூலில் சுவைக்கத் தக்கனவாய் அமைந்திருக்கின்றன.

கடல் அலை வேகமாக வந்து மோதுகிறது. ஆவேசம்! பேரிரைச்சல்! கோரத்தாண்டவம்!

இதைப் பார்க்கும்போது தொழிலாளர்களின் நினைவு வருகிறது. முதலாளிகளால் தாங்கள் வஞ்சிக்கப்படுவதை உணர்கின்றனர். நெஞ்சம் கொதிக்கிறது; கண்சிவக்கிறது! வாளை

எடுத்து வஞ்சகர்களை வேட்டையாடப் புறப்படுகின்றனர். இதை நடித்துக் காட்டும் கடல் இறுதியில் 'தொழிலாளர்களே தோற்றுப் போகிறீர்களே!' என்று கூறி நகையாடுகிறதாம். அதற்காகக் கடலைப் பார்த்துக் கவிஞன் கூறுகிறான்:

பொங்குகிறாய் என்றாலும்
மறுகணத்தில்

இறந்துபடுகின்றனையே!
புறப்பட்டோரின்

இறுதிநிலை உயர்ந்துவதாய்
எண்ணம் போலும்!

'வெள்ளம்' என்னும் கவிதை ஒரே உணர்வோடு இயங்கும் உயரிய உள்ளுணர்வுப்பா (*lyric*). 'காரணமில்லாமல் மனிதன்பலியாவதுண்டு' என்னும் அடிப்படை உண்மையில் வெள்ளத்தால் ஏற்படும் அழிவைச் சித்தரித்துக் காட்டுகிறது.

இந்தியாவின் சுதந்திரம், பஞ்சாங்கம் பார்த்து, ஆகஸ்டு 15-ம்நாளில் இரவு பன்னிரண்டு மணிக்கு வந்தது நினைவிருக்கலாம். அந்தச் சுதந்திரத்தை எப்படிக் கவிஞனின் சொற்கள் வரவேற்கின்றன பாருங்கள்.

உழைப்பவர்க்குண்ண உணவு-
மில்லை ஆனால்
உராந்தர் நமதுடல் வாடவில்லை!
உழைக்கும் பெருமக்கள் வாடு
கையில்-இங்கு
ஒட்டும் சுதந்திரம் யாருக்கடா?
போராட்டங்கள் ஓயவில்லை-இங்கு
பேச்சு-சுதந்திரம் கிட்டவில்லை
நாயொடு மக்கள் போராடு
கையில்-இங்கு
நண்ணும் சுதந்திரம் யாருக்கடா?

தொய்யாக்காதல்:—

உலகத்தைக் வெறுத்து ஒதுக்கிய ஒரு புத்தஇளைஞன் திடீரென்று காதலால் கட்டுண்டு போகின்றான்; மன்னன் மகள் வஞ்சியின்மேல் காதல். ஆனால் விலைமகள் ஒருத்தி அவனைக் காதலிக்கிறாள். அந்தக் காதல் நிறைவேறாது எனத் தெரிந்ததும் அவள் பழிவாங்கிக்கொள்ள நினைக்கிறாள். அவள் சூழ்ச்சிக்குத் துணையாக ஒரு குருக்கள் கிடைக்கிறான். இறுதியில் அமைதியாய் இருந்த புத்தன் காதல் நிறைவேறாமல் தனியனாய் ஆகிறான். அதாவது திரும்பியும் புத்த சமயத்தையே அடைக்கலம் அடைகிறான்.

குருக்களாக வரும் பாத்திரம் சூழ்ச்சிக்காரனாக அதாவது ஆரிய வேலையைத் திறம்படச் செய்பவனாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. நாடகப் பண்பு குருக்களிடமும் விலைமகளாக வருபவளிடமும் நன்றாகப் பொருந்தியிருக்கிறது.

குருக்கள் அரசனிடம் புத்தர்களைக் கழுவிலேற்றும்படி கூறுகிறான்: "உன் மகள் புத்த இளைஞனை அரண்மனைக்கு வருக" என்று கூறினாளே! அவன் வந்தானா? இந்த நாட்டின் மன்னனாயிற்றே! அழைத்தவள் மன்னனுடைய மகளாயிற்றே! என்றாவது நினைத்தானா? இவற்றையெல்லாம் நீ அறியாமலா இருக்கிறாய்!"

நின்னுளமும் பொறுத்ததுவோ?
ஆமாம் உன்றன்
நீதியுளம் பொறுத்திருக்கும்
பொறுத்திருக்கும்!
மன்னனும் அரசனையே
கடவுளென்று
மதிக்கு[illegible] கூறுமனு
நீதி தன்னை
மன்னொன்று கருதினனோ?
பின்னழைப்பை
மதியாதான் தனைப்பொறுத்தாய்
என்ன வித்தை!

அரசன் உள்ளத்தைக் கரைக்கும் வேலையைக் குருக்கள் செய்யும்போது, அந்தச் செயல் முறையைக் கவிஞனின் சொற்கள் அப்படியே காட்டுகின்றன.

புத்த சமயிகளை, நாட்டுக்குள் அனுமதித்தது அரசனின் தவறென்று குருக்கள் சொல்லவில்லை. அரசனின் பெருந்தன்மையான உள்ளம்-தருமத்திற்குத் தலைசாய்க்கும் உள்ளம் புத்தர்கள், செய்யும் அட்டகாசத்தைப் பொறுத்துக் கொண்டிருக்கிறது என்று சொல்லுகிறான். நயவஞ்சகமான பேச்சு!

ஆரியர்கள் தனக்குக் காரியம் ஆகவேண்டின் வாயாரப் புகழ்ந்து, அதில் மயங்கும்போது, ஆகவேண்டியதைச் சாதித்துக் கொள்ளுவார்கள். குருக்கள் வரும்போது 'வருக' என்று கூறிய மன்னன் கடைசியில் 'வாளை உருவு' என்று சொல்லும்படி ஆக்கப்படுகிறான். இடையே அரசன் ஒன்றும் பேசாமல் அமைக்கப்பட்டிருப்பது அவனது மயக்கத்தைத் தெளிவுபடுத்துகிறது.

மற்றொரு காட்சி. குருக்கள் தள்ளாடி நடந்துகொண்டு வருகிறார். சுட்டிச் சிறுவர்கள் சிலர் விளையாடுகின்றனர். அவரையும் அவர் பிடித்திருக்கும் கம்பையும் பற்றி நையாண்டி செய்கின்றனர். அவரை முன்னும் பின்னுமாகச் சூழ்ந்து,

மூன்று கால் பூச்சியைப் பாரும்
கடா-அது
முக்கி நடந்து முன்னேறுமடா!
ஊன்றிய கம்பைப் பிடுங்கிவிட்
டால்-அது
உடனே விழுந்துயிர் போகுமடா

என்று கேலி செய்கின்றனர்.

இதுபோன்ற சுவையான கட்டங்கள் நிறைய இருக்கின்றன.

மலரும் தமிழகம், கொய்யாக் காதல் ஆகிய இரண்டு கவிதை நூல்களும், தமிழ் நாட்டின் கவிதை இலக்கியத்தை வளம் படச் செய்பவை என்பதில் ஐயமில்லை.

என் கம்பன் இளங்கோவன்
இருக்கும் போது
எதற்கிந்தப் புதுநூல்கள்?
சிறுபையன்கள்
எழுதியதை நாம்படித்துச்
சுவைக்கலாமா?

என்று பண்டிதர்கள் இறுமாந்திருக்கின்றனர். இலக்கியத் துறையில் பழைய பாடல்களை உருப்போட்டு ஒப்பிக்கும் 'கிராமபோன்' காலம் மலையேறி விட்டது.

இளைஞர்களின் பேனா ஈடற்ற இலக்கியத்தை படைக்கத் துவங்கி விட்டது என்பதை மேற்கண்ட இரு நூல்கள் காட்டவல்லன.


மலரும் தமிழகம் — சாமி பழனியப்பன்
விலை ரூ. 1. புதுமை அறிவலகம் வலையபட்டி P. O.

கொய்யாக் காதல் — நாரா நாச்சியப்பன்
விலை 12 அணா ஒளி நிலையம், பலவான்குடி

ஏமாந்தது யார்?

"ரிஷி"

"பனியன், பனியன்-பம்பாய்ப் பனியன்" என்ற குரல் கேட்டு ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தார் சாமு சாஸ்திரி. பனியன் வியாபாரம் செய்யும் அந்த ஆள் சாஸ்திரியைப் பார்த்தவுடன் "சாமி நல்ல பனியன் வந்திருக்கு" என்று சொல்லிக்கொண்டே மூட்டையோடு திண்ணையில் உட்கார்ந்தான். சாஸ்திரியும் வெளியே வந்தார். மூட்டையை அவிழ்த்து ஒவ்வொரு சிறு அட்டைப் பெட்டியாக எடுத்து எடுத்துச் சாஸ்திரி முன்னால் வைத்து "ஒவ்வொன்றிலும் அரை டஜன் இருக்குதுங்க, ரொம்பமலிவான சரக்கு. இப்பொழுதுதான் பம்பாயிலிருந்து இறங்கிச்சிங்க. அரை டஜனுக்குக் குறைந்து விற்கிறதில்லீங்க" என்று கூறி முடித்தான். சாஸ்திரி ஒரு அட்டைப் பெட்டியை எடுத்தார்; திறந்து பார்த்துக்கொண்டிருந்தார். அதற்குள் அந்த ஆள் "அதெல்லாம் சரியா, ஆறு பனியன் இருக்குமுங்க; கணக்குத் தப்பாதுங்க. விலை ரொம்ப சல்லிசு. ரூபா மூணுதானுங்க" என்றான். சாஸ்திரி மனதிற்குள்ளேயே பனியன்களை எண்ணிப் பார்த்தார். எட்டு இருந்தது. சொல்லாமலே பெட்டியை மூடிப் பக்கத்தில் வைத்துவிட்டு, இன்னொரு பெட்டியை எடுத்தார். எண்ணினார். ஆறுதான் இருந்தது. அப்புறம் ஒரு பெட்டியை எடுத்து எண்ணிப் பார்த்தார். அதிலும் ஆறு பனியன்கள்தான் இருந்தன. சரியென்று அவனிடம் கொடுத்துவிட்டு எட்டுப் பனியன்கள் இருந்த பெட்டியை எடுத்துக் கொண்டு "என்னப்பா சொல்றே" என்றார். "அதுதான் சொன்னேனுங்களே. சரியாக அரை டஜன் இருக்குதா? ரூபா மூணுதானுங்க" என்றான். சாஸ்திரியார் உடனே ரூபா மூன்று கொண்டு வந்து கொடுத்து அவனை அனுப்பிவிட்டார். அரை டஜன் என்று சொல்லிவிட்டு எட்டு பனியன்களைக் கொடுத்துவிட்டான் மடையன் என்று பூரித்தார் சாஸ்திரி.



இந்த வியாபாரத்தைப் பார்த்துக் கொண்டிருந்த எதிர் விட்டுக் குப்பு ஐயர் வந்தார். சாஸ்திரி நடந்ததைச் சொல்லி ஆனந்தச் சிரிப்புச் சிரித்தார். குப்பு ஐயர் உடனே, "அட பாவி மநுஷா! ஏமாந்தாயா? இது மதராஸ் வேலை சார். அவனுக்கு எட்டுப் பனியன் இருக்குன்னு தெரியுமையா. எட்டுப் பனியனும் சேர்ந்தே ரூபா இரண்டரைக்கு நேத்தி சைனபஜாரிலே வித்தானையா" என்றார். சாஸ்திரி அசட்டுச் சிரிப்புச் சிரித்துக்கொண்டு கொஞ்சம் யோசனையுடன் விட்டுக்குள் போய்விட்டார்.

சாயந்திரம் அந்தப் பெட்டியை எடுத்தார். ஒரு பனியனை எடுத்துக் கொண்டு ஏழு பனியன்களை வைத்தார். தன் வேலையாளிடம் கொடுத்தார். "அடே, இதைக் கொண்டு போய் நமது ஆபீஸ் முதலியாரிடம் கொடுத்துவிட்டு, பணம் கொடுப்பார் அதையும் வாங்கிக் கொண்டு "வா" என்றுசொல்லி ஒரு கடிதமும் கொடுத்தனுப்பினர்.

வேலையாள் முதலியாரிடம் கொண்டுபோய்க்கொடுத்தான். முதலியாரோ பலே பேர்வழி. பார்த்தார். சூதினைத் தெரிந்து கொண்டார். ஒரு பனியனை எடுத்து விட்டில் வைத்துக் கொண்டு ஆறுபனியன்களையும் அவனிடம்எண்ணிக்கொடுத்து "ஐயாவிடம், எனக்குப் பனியன் இப்பொழுது தேவையில்லை என்று சொல்லிவிடு" என்றார். சாஸ்திரியாரிடம் வேலைக்காரன் ஆறு பனியன்களைக் கொடுத்தான், சாஸ்திரியார் முகத்தில் அசடு வழிந்தது.

●

அடையாளம்

சிறு கதை: ரா. நீலமேகம்

இரண்டுவருடங்களுக்கு முன்பு அவள் ஆளானுள். அன்றைய தினமே அவள் பள்ளி செல்வதை நிறுத்தி, வீட்டில் சிறைப்படுத்தப் பட்டாள். மங்கள நீராட்டு விழா முடிந்த மறு நாளே அவளுக்கு நம் நாட்டு வழக்கப்படி மணம் பேசப்பட்டது.

அன்று அவளைப் பெண் பார்க்க வரப்போவதாக அவள் தாய் அவளுக்கு முன் கூட்டியே சொல்லி வைத்தாள். அதோடு விடாமல் வீட்டிலிருந்த நகைகள் பூராவையும் அவளுக்குப் பூட்டினுள். நல்ல புடவை உடுத்தினுள். தலைவாரிப் பொட்டிட்டாள். இதையெல்லாம் கண்ட செல்லமும் குதூகலமடைந்தாள்.

“தன்னைப் பார்க்க ஒரு ஆண் பிள்ளை வரப்போகிருர். அவர் முன் நாமும் நன்ருக இருக்க வேண்டும். அவர் ஏதாவது கேட்டால் தகுந்தபடி பதில் கூறவேண்டும். அவர் மனத்தை அறிய முயற்சிக்க வேண்டும்” என்று எண்ணமிட்டு இன்பக் கனவு கண்டுகொண்டிருந்தாள்.

நல்ல நேரம் என்று குறிப்பிட்டிருந்த அந்த நேரத்தில் பூ, பழம், தேங்காய், வெற்றிலை, பாக்கு, மஞ்சள், குங்குமம் சகிதமாக இரண்டு கட்டுக்கழுத்திகளும், ஒரு பெரியவரும் உள்ளே வந்தார்கள். வந்த இரண்டு பெண்களும் உள் கூடத்திற்கு வந்தார்கள். பெரியவர் திண்ணையில் செல்லத்தின் தந்தையுடன் கதையளக்க ஆரம்பித்து விட்டார்.

சமையலறையில் நின்று கொண்டு செல்லம் மெதுவாகத் தலையை நீட்டினுள். உள் கூடத்தில் உட்கார்ந்திருந்த இரண்டு பெண்களையும் பார்த்தாள். “அவர் வந்திருக்கிருரா?” என்று அவள் கண்கள் ஆராய்ந்தன. ஆனல்......ஏமாற்றம். ‘எங்கே இருக்கிருரோ? எப்படி இருப்பாரோ?’ ஏக்கம் இடம்பெற்றது அவள் இதயத்தில்.

“செல்லம் கொஞ்சம் சுண்ணும்பு எடுத்துக்கிட்டு வாம்மா” என்ற தாயின் அழைப்பைக் கேட்டுச் செல்லம் மெதுவாகச் சமையலறையைவிட்டுவெளியே வந்தாள். இரண்டு பெண்களும் அவளை உச்சி முதல் உள்ளங் கால் வரையிலும் உற்றுக் கவனித்தார்கள். இதைக் கண்ட செல்லத்திற்குச் சொல்ல முடியாத வேதனையாக இருந்தது. அங்கு இருக்க மனம் இல்லாமல் “விர்” என்று அவ்விடத்தை விட்டு வேகமாக நடந்தாள்.

“செல்லம்! எங்கே போறே, வந்திருக்காங்க பாரு” என்ற தாயின் வார்த்தைகளைக் காதில் கூட வாங்கிக்கொள்ள விரும்பவில்லை அவள்.

"பாவம்! புள்ளே புதுசு தானே, வெக்கப்படுது" என்றாள் வந்திருந்தவர்களில் ஒருத்தி.

"ரொம்ப வெட்கப்படுவாள். என் கிட்டேக் கூட அதிகமாகப் பேசமாட்டாள்" என்று தன் மகளைப் புகழ்ந்து கொண்டாள் செல்லத்தின் தாய்.

"பார்த்தாலே தெரியுதில்லே" என்று ஆமோதித்தாள் அவள்.

"அழுகையும் ஆத்திரமும் செல்லத்திற்குப் பிறிட்டுக் கொண்டு வந்தன. என்னை இவ்வளவு உற்றுக் கவனிக்கிறார்களே, அவரை யார் பார்த்திருக்கிறார்கள்?"

அவளுடைய இந்தக் கேள்விக்கு யார் தான் பதில் கூற முடியும்?

இரண்டு பெண்களில் ஒருத்தி கிழவனிடம் போய் ஏதோ 'மொணமொண'த்தாள். அதன் பிறகு தந்தையும் கிழவனும் என்னென்னவோ பேசிக்கொண்டார்கள்.

"அடி சீதே! தங்கச்சி சாதகத்தை எடுத்துக்கிட்டு வா" என்றார் செல்லத்தின் தந்தை.

சாதகம் கிழவன் கையை அடைந்தது. செல்லத்தின் தவிப்பு அதிகரித்தது. என்னவோ தன் தாயிடத்திலாவது சொல்லிவிட வேண்டும் என்று தான் எண்ணினாள். ஆனால் அவளை அறியாமல் ஓர் பயம் அதைச் செய்யவிடவில்லை.

∴ ∴ ∴

சாதகம் கனகச்சிதமாகப் பொருந்தியிருக்கிறது; இந்தப் பெண்ணுக்கும் அந்தப் பிள்ளையாண்டானுக்கும் அமோகப் பொருத்தம்! "திவ்யமான சாதகம்" என்று ஆமோதித்தார் சோதிடர்.

இதைக் கேட்ட செல்லம் மனமுடைந்து விட்டாள். ஆனால் செல்லத்தின் தாயும் தந்தையும் ஆனந்தக் கடலில் ஆழ்ந்தார்கள். கல்யாண ஏற்பாடுகள் ஒரே தடபுடலாக நடந்தன.

அன்று கல்யாணம். வாத்தியங்கள் ஒலித்தன வேதங்கள் முழங்கின. ஹோம குண்டத்தின் புகை வீட்டையே சுற்றிக் கொண்டது. செல்லத்தின் உள்ளத்தில் ஒரே கொந்தளிப்பு. சொல்ல முடியாத வேதனை. வெளிப்படுத்த வகையறியாது துடித்தாள், பயன்? கண்ணீர் 'பொல பொல'வென்று உதிர்ந்தது. ஹோமப் புகையின் விளைவு என்று யாவரும் எண்ணினார்கள். ஆனால்......அது உள்ளப் புகைச்சலின் சாயை என்பதை அறிந்து கொள்ள ஒரு உயிராவது அங்கு இருந்ததா? இல்லை. சாதகம் தான் பொருந்தியிருக்கிறதே அதை விட வேறு என்ன வேண்டும்!

∴ ∴ ∴

திருமணம் முடிந்தது. கணவன் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டாள், செல்லம். எங்கோ அன்னிய தேசத்திற்கு அடிமையாகச் செல்வதைப் போலவே அவள் நினைத்தாள்.

"தன் கணவர் எப்படிப்பட்டவரோ? எப்படி நடந்துகொள்

வாரோ?" என்று ஏக்கம்தான் அவள் இதயத்தில் இடம் பெற்றிருந்ததே தவிரக் குதூகலம் உண்டாகவில்லை அவளுக்கு.

அதற்கு ஏற்றாற்போல் அவனும் அப்படியா அமையவேண்டும்? அவன் அழகில் தான் குறைவென்றால் அன்பிலுமா குறைந்திருக்க வேண்டும்?

கணவனுடன் நடத்தும் வாழ்க்கை மேன்மையானது என்று அவள் எண்ணியிருந்த எண்ணம் கனவாகவே முடிந்தது. செல்லத்திற்கு அவன் நடத்தை, செய்கை, பேச்சு யாவற்றிலும் ஓர் முரட்டுத்தனம் தான் மிஞ்சி நின்றதே தவிர அவள் எதிர்பார்த்த மேன்மை அவனிடம் காணப்படவில்லை.

மலரின் இதழுக்குக் கூட வாறு தோன்றா வண்ணம் தேனை உறிஞ்சிச் செல்லும் வண்டைக் கண்டால் செல்லம் பெருமூச்சு விடுவாள். வண்டின் உள்ளம் கூடத் தன் கணவனுக்கு இல்லையே என்று ஏங்குவாள். கணவன் எப்பொழுது வருவான் என்று எதிர்பார்த்திருப்பதற்குப் பதிலாக அவன் கண்ணில் படாமலே இருக்க மாட்டானா என்று வேண்டிக் கொள்வாள்.

பல்லைக் கடித்துக்கொண்டு ஓர் வருடத்தை ஓட்டினாள். அதற்கு மேலும் அவளால் பொறுமையுடன இருப்பதென்றால் மனிதப்பிறவியாகத் தான் இருக்கும் வரை முடியாது என்பதை உணர்ந்தாள்.

ஓடுகின்ற ரயில், நதி, திரை கடல், விஷம் இவைகள் யாவும் அவளுடைய துன்பத்திற்கு முடிவு காண்பிப்பதாக உறுதி கூறின. அதுவே மேல் என்று முடிவு கட்டினாள்.

ஃ ஃ ஃ

செல்லத்தின் மனநிலையை அறிந்த தாய் துடிதுடித்தாள். செல்லத்திடம் ஓடி வந்தாள்.

"செல்லம், கடைசியாக உன்னை ஒன்று வேண்டிக்கொள்கிறேன். உன் வயிற்றில் தோன்றியிருக்கும் உயிரை எண்ணிப்பார். உன்னைப் பெற்ற பிறகு உன்னை வளர்ப்பதில் எவ்வளவு ஆனந்தம் கண்டேன் நான். அதே போல நாளை உனக்குப் பிறக்கப் போகும் குழந்தை உனக்கு அளிக்கப்போகும் இன்பத்தை எண்ணிப்பார் செல்லம்." என்று கெஞ்சினாள்.

செல்லம் யோசித்தாள். உண்மைதான். தன வயிற்றில் பிறக்கப் போகும் குழந்தை; அதன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாலே தன் கஷ்டமெல்லாம் பஞ்சாய்ப் பறந்து விடும் என்று கருதினாள். அது வரை எவ்விதக் கஷ்டத்தையும் பொறுத்துக் கொள்வதென்று முடிவு செய்து கொண்டாள்.

ஒன்றன்பின் ஒன்றாக மாதங்கள் பறந்தன-அப்பா! கடைசி மாதம். அந்த நாளும் வந்தது. வேதனை கண்டது பொறுத்துக்கொண்டாள். தனக்கு உதயமாகப் போகும் புது வாழ்வின் சுடரைக் காணத் துடிதுடித்தது அவள் உள்ளம்.

எண்ணியது வீண் போகவில்லை. ஆண் மகவு-ஆனந்தம் தாங்கமுடியவில்லை அவளுக்கு.

"வீல்...வீல்..."

திடுக்கிட்டுக் கண் விழித்துக் கொண்டு குழந்தையை மார்புடன் அணைத்துக் கொண்டாள். இனிமேல் சென்றதை நினைப்பதில்லை என்று முடிவு செய்து கொண்டாள்.

⁂ ⁂ ⁂

அன்று குழந்தைக்குப் பெயர் சூட்டும் நாள். தெருவில் உள்ள ஆண் பெண் அனைவரும் செல்லத்தின் வீட்டில் வந்து கூடிவிட்டார்கள். இன்ப உலகிலே சஞ்சரித்துக் கொண்டு செல்லம் குழந்தையை மடியில் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

ஒவ்வொருவராகக் குழந்தையைப் பார்த்தார்கள்.

"குழந்தை யாரைப்போல இருக்கான்?" என்றாள் ஒரு பெண்.

"இதிலென்ன சந்தேகம் வந்தது?" என்று கேட்டாள் மற்றவள்.

"யாராட்டம் தான் இருக்கிறது சொல்லேன்" என்று வற்புறுத்தினாள் அவள்.

அதை அறியச் செல்லமும் தான் விரும்பினாள். அதிக ஆவலாக அவள் சொல்லப் போகும் பதிலை எதிர்பார்த்தாள்.

"என் அவன் அப்பனை அப்படியே உரிச்சு வச்சிருக்கிறது" என்றாள்.

ஆயிரம் இடிகள் ஒரே சமயத்தில் அவள் தலையில் விழுந்தது போலிருந்தது. அவள் இதயமே நின்றுவிடும் போல அடித்தது.

"ஐயோ!...அவன் அப்பனைப் போலத்தானா இருக்கிறான்?" அதற்கு மேல் அவள் பேசவில்லை. சுருண்டு விழுந்தாள்.

தான் விரும்பாத கணவனையும், அவனைப்போலவே இருந்த குழந்தையையும் பிரிந்து எங்கோ போய்விட்டாள்.

பொருந்தா மணத்தின் அடையாளம்—ஆம் குழந்தை 'வீல் வீல்' என்று கதறியது!

ஆனால் அவள் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை.

ஆம். இந்த உலகத்தை விட்டுப் பறந்துவிட்டாள்! ●

சிறுவர் அரங்கம்

மன்னனுக் கேற்ற மந்திரி

அத்தான்



"வெள்ளைக்காகம் பறக்கு"தென்று
வேந்தன் சொன்ன சொற்கேட்டு
'வெள்ளை' 'நல்ல வெள்ளையென்று'
விரும்பிச் சொல்வான் மந்திரியாம்"

என்ற பாடலைப் பாடிக்கொண்டு யாரோ ஒரு மொட்டைத் தலை ஆசாமி வீதி வழியே போய்க்கொண்டிருந்தான். மாடியில் உட்கார்ந்திருந்த மந்திரி மனோகரனின் காதில் அந்தப் பாடல் விழுந்ததும் உடல் ஒருமுறை குலுங்கிற்று. உடனே சேவகனை விட்டு அந்த ஆசாமியைக் கூட்டிவரச் சொன்னான்.

"ஏய்! மொட்டைத்தலை! என் வீதியிலே சப்தம் போடுகிறாய்?"

"இல்லை, பாட்டுப் படித்தேன்!"



"முட்டாள்! என்ன பாட்டு?"

அந்த ஆசாமி லேசாக அந்தப் பாட்டைப் பாடிக் காண்பித்தான்.

"ஓ! நிறுத்து, இதை யார் எழுதியது?"

"தெரியாது"

"எதற்காகப் பாடுகிறாய்?"

"பிச்சை எடுப்பதற்காக"

"சரி தொலைந்து போ. இனிமேல் இப்படி வீதிகளில் சப்தம் போடக் கூடாது" என்று சீறினான் மந்திரி.

தலையைத் தடவிக் கொண்டே அந்த ஆள் போய்விட்டான்.

∴ ∴ ∴

மனோகரன் அந்த நாட்டு மந்திரி. மன்னனுக்கேற்ற மந்திரியென்று ஊர் முழுவதும் பேச்சு.

அரசன் ஒரு நாள் ஒரு காட்டுக்கு வேட்டையாடப் போயிருந்தான். போன இடத்தில் தற்செயலாக ஒரு இடைய வீட்டுப் பெண்ணைப் பார்க்க நேர்ந்தது. அவள் மிகவும் அழகாக இருந்தாள். அவள் பெயர் பவள மல்லி. அரசனுக்கு அவளைத் திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்ற ஆசை பெருக்கெடுத்தது.



சமயம் பார்த்து அவளைத் தனியாகச் சந்தித்துப் பண ஆசைகாட்டினான். அதிகாரத்தைக் காட்டிப் பயமுறுத்தினான். ஆனால் பவள மல்லியோ அத்தை மகன் முத்துவைத் தவிர வேறு யாரையும் கண்ணெடுத்துக் கூடப் பார்ப்பதில்லையென்று உறுதியாகச் சொல்லிவிட்டாள். 'சரி இருக்கட்டும் பார்த்துக் கொள்வோமென்று' சொல்லிக்கொண்டே அரசன் போய்விட்டான்.

இராப் பகலாக யோசித்தான். அவளை விட்டு முத்தைப் பிரித்துவிட்டால் அவள் பணிந்து விடுவாளென்று அரசன் எண்ணினான். ஆகவே ஆட்களைவிட்டு முத்தை அரசசபைக்குக் கூட்டி வரச் செய்தான்.

"மந்திரி! இவன்தானே முத்து?"



"ஆமாம் அரசே!"

"இவன்தானே பாலில் தண்ணீர் கலந்து நமது குடிமக்களை மோசஞ் செய்கிறான்"

"இவன் பாலிலா தண்ணீரைக் கலக்கிறான்? நன்றாகச் சொன்னீர்கள்! தண்ணீரிலல்லவா பாலைக் கலக்கிறான்"

"அப்படியா!"

"ஆமாம்! அரசே!"

"சரி, மூன்று ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதித்திருக்கிறேன்" என்று அரசன் தனது தீர்ப்பை முடித்தான்.

"அரசே! ஒரே ஒரு வார்த்தை!" என்று முத்து பணிவாகச் சொன்னான்.

"என்ன?" என்று அரசன் உறுமினன்.

"நான் இன்னும் ஒரு வியாபாரம் கூடச் செய்யத் தொடங்க வில்லையே!"

"என்ன! நீ ஒன்றும் செய்யத் தொடங்கவில்லையா?" என்று அரசன் சற்று நேரம் யோசிக்க ஆரம்பித்தான்.

"ஏ! உன் அப்பன் என்ன செய்கிறான்?" என்று மந்திரி கேள்வியைத் தொடர்ந்தான்.

"பால் வியாபாரம்"

"அப்பன் செய்தாலென்ன? மகன் செய்தாலென்ன?" என்று அரசன் ஒரு கனைப்புக் கனைத்தான்.

"அரசே! உங்கள் தீர்ப்புச் சரியானது. அப்பன் சம்பாதித்த சொத்தை நாளைக்கு இவன்தானே எடுத்துக் கொள்ளப் போகிறான்" என்று முற்றுப்புள்ளி வைத்தான், மந்திரி மனோகரன்.

குழந்தைகளே! மொட்டைத்தலை ஆசாமி பாடிய பாட்டைக் கேட்டு மந்திரி மனோகரன், உடல் குலுங்கியதற்குக் காரணம் இப்பொழுது தெரிகிறதல்லவா?

●

குழந்தை வளர்ப்பு முறை



குழந்தையின் உணவு

"தமிழரசி"

குழந்தை வளர்ப்பில் ஆகாரம் முக்கிய இடம் பெறுகிறது. குழந்தை வலுவுடையதாகவும், அழகுடையதாகவும் வளர்வது ஆகாரத்தைப் பொறுத்தது தான். குழந்தைப் பருவத்தில் நன்கு பராமரிக்கப்படும் குழந்தைகளே பிற்காலத்தில் ஒழுக்கத்திற் சிறந்தனவாகத் திகழ முடியும்.

சிறுகுழந்தைகட்குக் கொடுக்கப்படும்உணவு, சத்துடையதாகவும் எளிதில் ஜீரணிக்கக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். எனவே குழந்தைகட்குத் தாய்ப்பாலே சிறந்த ஆகாரமாகும். தாய்ப்பாலில் நோய்க் கிருமிகள் கலந்திருக்க மாட்டா. தாய்ப்பால் எளிதில் ஜீரணிக்கக்கூடியது. புரதம், விட்டமின்கள், உப்புச் சத்துகள் முதலியன தேவையான அளவு கலந்துள்ள ஓர் உணவுப் பொருள். தாய் உடற்கட்டோடு இருந்தால் தான் தாய்ப்பாலுண்ணும் குழந்தையும் உடலுறுதியோடிருக்கும். எனவே, தாயும் எளிதில் ஜீரணிக்கக் கூடிய சத்துள்ள உணவை உட்கொள்ள வேண்டும். தாய், முட்டை - இரைச்சி- கிச்சிலி - தக்காளி - கீரை - காய்கறி முதலியன சாப்பிடுதல் நலம். பலாப்பழம், மாம்பழம் முதலியன குழந்தைக்கு மந்தமளிக்கக் கூடியனவாகையால் அவற்றைத் தாயும் உண்ணாதிருத்தல் நலம்.

தாய்ப்பாலற்ற குழந்தைகட்குப் பசுவின் பால் கொடுக்கப்படுகிறது. இதில் சில முறைகள் கையாளப்பட வேண்டும். குழந்தைகட்குக் கொடுக்கப்படும் பால் ஒரே பசுவினதாக இருக்க வேண்டும். அடிக்கடி மாற்றுவது கூடாது. பாலில் பாதிப் பங்கு தண்ணீர் ஊற்றிப் பாலைக் காய்ச்ச வேண்டும். காய்ச்சிய பாலில் சிறிது சர்க்கரை போட்டுக் கொடுக்கலாம். காலையில் கறந்த பாலை ஆறு மணி நேரத்திற்கு மேல் வைத்திருக்கக் கூடாது. மத்தியானம் இரண்டு மணியிலிருந்து மாலையில் பால் கறக்கும் வரையில் வேறு ஏதாவது ஆகாரம் கொடுக்கலாம். குளுக்கோஸ், கிளாக்ஸோ முதலியன கொடுக்கலாம். வீடுகளிலேயே மாவு தயார் செய்து கஞ்சி காய்ச்சிக் கொடுப்பது சாலச் சிறந்தது. கேப்பை, கேழ்வரகு முதலியன

வற்றை உரலில் போட்டுக் குத்தி, தண்ணீரில் கரைத்து மெல்லிய துணியைப் போட்டு வடிகட்டி வருகின்ற குழம்பு போன்ற பசையை மீண்டுமொரு முறை உரலிலிட்டுக் குத்தி முன் போலவே வடிகட்டிக் கிடைக்கும் தண்ணீரைத் தெளிய வைத்தால் பன்னீர் போன்ற நீர் தேங்கி நிற்கும். அடியில் மாவு தேங்கி நிற்கும். அந்த மாவை வெய்யிலில் உலர வைத்து நன்கு உலர்ந்த பின் அந்த மாவைத் தகரங்களில் அடைத்து வைத்துக்கொண்டு தேவையான போது கொஞ்சம் தண்ணீர் விட்டுக் காய்ச்சிச் சிறிது சர்க்கரை கலந்து கொடுக்கலாம். ஜவ்வரிசியை வறுத்து மாவாக்கிக் காய்ச்சிக் கொடுக்கலாம்.

குழந்தைகளைக் கட்டாயப் படுத்தி உணவருந்தச் செய்யக் கூடாது. அவ்விதம் கட்டாயப் படுத்துவது கேடாகவே முடியும்.

பாலருந்தும் சீசாக்களில் பால் கொடுப்பதுதான் நல்லது. சீசாவையும் உடனுக்குடன் கழுவிச் சுத்தம் செய்ய வேண்டும். 10 நாட்களுக்கொரு முறையாவது அதிலுள்ள ரப்பரை மாற்றிவிட வேண்டும்.

குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கொடுப்பதிலாயினும் சரி, வேறு பாலுணவு கொடுப்பதானாலும் சரி மூன்று மணி அல்லது நான்கு மணி நேரத்திற்கொரு முறைதான் கொடுக்க வேண்டும். குழந்தைகட்கு உணவு கொடுக்கும்போது சத்துடைய ஆகாரம் தேவையான போது வேண்டிய அளவு கொடுத்தல் இவற்றைக் கவனிக்க வேண்டும்.

ஒரு வயது அல்லது ஒன்றரை வயது கழிந்த உடனேயே குழந்தைகள் உண்ணவுண்ண ஆரம்பிக்கும். இப்பருவம் வளர் பருவம். இந்தக் காலத்தில் சோற்றை நன்கு குழையப் பிசைந்து நன்கு வேகவைத்து மசியல் செய்த சிறிது பருப்பும் கலந்து கொடுத்தல் நல்லது.

காலையில், இட்டலி, இடியாப்பம், முதலியன கொடுக்கலாம். பின் சிறிது பால்கொடுக்கலாம். பகலில் சோறும், மாலையில் சிறிது ஆரஞ்சு, வாழைப்பழம், தக்காளி இவற்றில் ஏதேனுமொன்றும், இரவில் கொஞ்சம் பாலும் உணவாகக் கொடுப்பது நல்லது. $1\frac{1}{2}$ வயது வரை இடையிடையே தாய்ப்பால் கொடுக்கலாம். இக்காலங்களில் குழந்தைகட்குக் காப்பி கொடுக்கக்கூடாது.

வறுமை தாண்டவமாடும் நாட்டில் நாம் வாழுகின்றோம். எனவே $2\frac{1}{2}$ வயது முதல் 7 வயது வரை குழந்தைகட்குப் பால் கொடுப்பதென்பது இயலாதது. அப்படியானால் என்னென்ன உணவுகள் கொடுக்கப்பட வேண்டுமென்பதைப் பின்னர் ஆராய்வோம்.

வளரும் இலக்கியம்

குடியாட்சி ★★★

உலகத்தில் அரசுமுறை எவ்வாறு தோன்றிற்று? வாழ்க்கையில் அது முக்கியத்துவம் அடைந்தது எப்படி?—என்பன போன்றவற்றைத் தெளிவான முறையிலே எழுதிச் செல்கிறார் அறிஞர் கா. அப்பாத்துரை அவர்கள். முடியாட்சி வீழ்ச்சியுறக் காரணங்கள், அரசர்கள் கொண்டாடிய தெய்வீக உரிமை எப்படி மக்களால் மறுக்கப்பட்டது என்பன போன்றவை நன்றாக விளக்கம் செய்யப்பட்டிருக்கின்றன. அறிஞர் அப்பாத்துரை அவர்களின் எழுத்துக்களைப்பற்றி அதிகம் சொல்லவேண்டிய அவசியமில்லை. இன்று வெளியாகும் ஒன்பதாயிரம் புத்தகங்களைப் படித்து, அதனால் எய்தும் அறிவை, அப்பாத்துரையவர்களின் ஒரு நூலைப் படித்து அடைய முடியும் என்பது பலர் அறிந்த உண்மை. ஏனென்றால் முதற் பக்கத்திலிருந்து முடிவுவரை, பார்க்கும் இடந்தோறும், விஷயம் நீக்கமற நிறைந்திருக்கும். இது அவரது நூற்களின் தனிப்பண்பு என்று சொல்லலாம். அறிஞர் கா. அப்பாத்துரை அவர்களின் நூற்களைக் கல்லூரி மாணவர்களுக்குப் பாடமாக அமைத்தால், மாணவர்கள் நல்ல விஷயங்களைப் படித்துத் தெரிந்து கொள்ளுகிறார்கள் என்று மகிழ்ச்சி அடையலாம். விலை ரூ 3—0—0 வெளியிடுவோர்: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் — 6, பவழக்காரத் தெரு, சென்னை 1.

மு. அ.

ந. சி. கந்தையா பிள்ளை இயற்றியவை ★★

திருவள்ளுவர்: தமிழ்ப்பெரியார் திருவள்ளுவனாரின் காலம், சமயம் பற்றிய ஆராய்ச்சி. இன்று வரையப்படும் திருவள்ளுவர் உருவம் ஒரு சிற்பியின் கற்பனையே என்று ஆசிரியரே முடிவு கட்டுகிறார். இதுவல்ல திருவள்ளுவர் உருவம் என்று கண்ட பின் அட்டையில் அவ்வுருவத்தைப் போட்டிருக்க வேண்டாம். விலை எட்டணா.

ஆதி மனிதன்: மனித இனம் நாகரிகமடைந்த விதத்தைப் பற்றிய ஆராய்ச்சிப் புத்தகம் இது. விலை எட்டணா.

பெண்களும் கழகமும்: பெண்கள் இயற்கை பற்றியும் அவர்கள் ஆடவர்க்கு விலங்கான வரலாறுபற்றியும் சுருக்கமாகக் கூறும் நூல் இது. விலை பனிரெண்டணா.

அகத்தியர்: அகத்தியர் பற்றிய ஆராய்ச்சி. புராணங்கள் கூறும் அகத்தியர் வேறு. தமிழ் வளர்த்த அகத்தியர் வேறு என்று முடிவு காண்கிறார் ஆசிரியர். விலை எட்டணா.

மறைந்த நாகரிகங்கள்: சிந்து வெளியில் வாழ்ந்த இராவிடர்களின் நாகரிகம் பற்றிய விரிவான ஆராய்ச்சி. விலை ரூ. 1-4-0

திருக்குறள் விளக்க உரை: ஐந்து பாகங்கள்: முறையே 50, 60, 70, 80, 100 குறள்களைக் கொண்டு ரூ. 0-2-6, 0-3-0, 0-3-6, 0-4-0, 0-5-0 விலையுள்ளவை. அரசியலார் வகுத்துள்ள பாடத்திட்டப்படி முதல் உயர்நிலை வகுப்பிலிருந்து ஐந்தாம் உயர்நிலை வகுப்புவரை படிக்கும் மாணவர்களுக்குப் பயன்படும் முறையில் அமைந்தவை. இந்நூல்களை வெளியிட்டோர்: ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், 53-56 பவழக்காரத் தெரு, சென்னை 1.

அல்வாத்துண்டு ★★

சிறுவர்களுக்கேற்ற கதை. 'ஸ்டண்ட் சினிமாப்படம்' பார்ப்பதுபோல் விறு விறுப்பாக இருக்கிறது, கதையைப் படித்தால்! ஆசிரியர் தமிழ்வாணன், ஜில்ஜில் பதிப்பகம், தி. நகர் சென்னை. விலை 4 அணா.

தனித்தமிழ்க் கிளர்ச்சி ★★

அம்மானைத் துறையில் பாடப்பட்டிருக்கும் இந்நூலில் தமிழர் உயர்வு விளக்கப்பட்டுள்ளது. வாசகர்கள் தம் கருத்தை எளிதில் புரிந்து கொள்ளத் துணையாகக் குறிப்புரையும் சேர்த்துள்ள ஆசிரியரின் நுண்ணறிவைப் பாராட்ட வேண்டும். ஆசிரியர் வித்துவான் சுந்தர சண்முகனார், விலை அணா 5. பைந்தமிழ்ப் பதிப்பகம் 61-B-வைசியர் தெரு, புதுவை.

இல்லப் பெயர் அகர வரிசை ★★

பெயர் வைப்பதற் கேற்பத் தமிழில் சொற்கள் இல்லை என்பார் கூற்று எத்தனை பொய் என்பதை விளக்கி விழிப்பு நல்கும் இந்நூல் தமிழர் ஒவ்வொருவர் இல்லத்திலும் இருக்க வேண்டும். நாட்டுக்கு நல்லது செய்யும் தமிழ்ப் பாதுகாப்புக் கழகத்தாரை வாழ்த்துகிறோம். விலை அணா 3. திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 6 பவழக்காரத் தெரு, சென்னை 1.

இராவணன் ★★

கவியரசர் பாரதிதாசன் இயற்றிய இரணியன் என்ற நாடகம்போன்று அதற்கடுத்தபடியாக வெளிவரும் நூல் இராவணன். இதன் ஆசிரியர் ஏ. கே. வேலன், நல்ல மிடுக்கானநடையில் உரையாடல்கள் வகுத்துள்ளார், இராவணனுடைய கூட்டத்தின் பெயர் வடமொழியாக இருப்பதற்குக் கூறும் காரணம் பொருத்தமாக இருக்கிறது. விலை ரூ. 1-12-0. செந்தமிழ்ப்பாசறை கரந்தை,தஞ்சை.

பிள்ளையோ பிள்ளை ★★

சிறுகதை எழுதுவதில் திறமைவாய்ந்த தோழர் மு. கருணாநிதியவர்கள் நிலைகுலைந்து தலைவிரித்தாடும் சமூகத்தைத் தம் பேனா முனையால் சாடுகின்றார். இக்கதை பழமைக்கோர் மறுப்பு! விலை ஆறணா. விந்தியம் வெளியீடு திருவாரூர்.

இன்பக் கனவு ★★

அழகொழுகும் தமிழில் சிந்தனையைத் தூண்டும் சிறுகதைகள் எழுதிவரும் தோழர் இராதாமணாளனின் நான்கு கதைகளின் தொகுப்பு. மீரா என்றகதை மிகச்சுவையானது. விலை அணா 12. புத்துலகப் பண்ணை, சென்னை—7.

பெண்களோடு வாழ்வது எப்படி? ★

பெண்கள் இன்ப ஊற்று, அவர்களோடு பழகுவது ஒரு கலை என்று பெண் பெருமை பற்றியும் பெண்களிடம் ஆண்கள் நடந்துகொள்ளும் முறை பற்றியும் முல்லைக் கொடியாள் எழுதியது இப்புத்தகம். விலை 3 அணா. முத்தமிழ் நிலையம், சென்னை—1.

இந்துமதம் தமிழர் மதமா? ★★

சைவ மதத்தை இந்து மதமெனக் கொண்டு அது சற்றேனும் தமிழர்நெறியுடையதல்ல என்று அப்பர் சம்பந்தர் வரலாறுகள் இரண்டையுமே வைத்துக்கொண்டு ஆராய்ச்சி செய்கிறார் ஈழத்து அடிகள். சுவையான ஆராய்ச்சி! பார்ப்பனச் சூழ்ச்சிகளைப் பட்டென விளக்கும் ஓர் மின் விளக்கு இந்நூல்! விலை எட்டணா. முத்தமிழ் நிலையம், சென்னை—1.

இந்தியாவில் சோஷலிசம் ★★

யாருக்கும் புரிகிற வகையில் தக்க உதாரணத்தோடு சோஷலிசத்தைப் பற்றி ஜமதக்னி விளக்குகிறார். இந்தியாவில் சோஷலிசம் வரவேண்டுமானால் மதவெறி மாய வேண்டும், சாதிப் பித்தம் தொலைய வேண்டுமென்று ஆசிரியர் முடிவுகட்டுகிறார். விலை 12 அணா. முத்தமிழ்நிலையம் சென்னை—1.

நிமிஷக் கதைகள் ★★

நல்ல வேடிக்கையான சிறு சிறு கதைகள் பத்தொன்பது இருக்கின்றன. சின்னஞ் சிறு குழந்தைகள் வாங்கிப் படிக்கலாம். விலை அணா 5. தமிழ்நிலையம், புதுக்கோட்டை.

பாசறை ★★

நம் நாட்டுமக்களின் நலனுக்காக நம் நாட்டுமக்களே நம் நாட்டை ஆளவேண்டுமென்று திராவிடப்பண் முழக்கி எழும் பாசறையை வரவேற்கிறோம். திங்கள் வெளியீடு. ஆசிரியர் வே. நரசிம்மன். விலை 4 அணா. 6, குமரப்ப முதலி தெரு, சென்னை—1.

தமிழ்த் தொண்டன் ★★

தமிழார்வம்நிறைந்த தோழர் அ. ச. ஞானசம்பந்தரின் தமிழ்த் தொண்டனை வரவேற்கிறோம், வாழ்த்துகிறோம் பயனுண்டென்ற காரணத்தால்! விலை 4 அணா. மாதப்பத்திரிகை 130, இராச வீதி காஞ்சிபுரம்.

போர்வாள் ★★

இந்நாடகம் மடமைகடிந்து திராவிட சமுதாயத்தில்போக்க வேண்டிய இன்றைய குறைபாடுகளை எடுத்துக் காட்டுகிறது. துடிக்கும் உள்ளம் வாய்ந்த இளஞ்சிங்கங்களுக்குச் சுவைசேர்க்கும் நாடகம். ஆசிரியர் C. P. சிற்றரசு. விலை ரூ. 1—4—0. அருமைமணிப் பதிப்பகம், புதுச்சேரி.

தமிழுலகு ★★

ஆசிரியர் நல்ல இனிய நடையில் தமிழ் பற்றியும் தமிழன் கடமை பற்றியும் கூறுகிறார். வடநாடு தென்னாடு எனப் பிரிப்பது விந்திய மலையே என்று ஆசிரியர் கூறுகிறார். அதுதானே உண்மையும்கூட! தமிழியக்கம்கண்ட செம்மல் ஈ. வே. ராமசாமிப் பெரியாரின் 79-வது ஆண்டுவிழா நினைவாக இதை எழுதியதாக இந்நூலாசிரியர் எஸ். எம். மகாலிங்க முதலியார் கூறுகிறார். அவர் முயற்சி

வெல்க! விலை 2 ரூபாய். தென்னவர் நிலையம் கோட்டாறு, தென் திருவிதாங்கூர்.

புரட்சிப் பெண் ★

ஆசிரியர் கூறிக்கொள்வது போல இதிலொன்றும் புது முறை இல்லை. எல்லாம் வடநாட்டுப் பாணி. வடநாட்டுப் பாணியைப் புதுமுறை என்று கருதும் மனப்பண்பு மாற வேண்டும். ஆயினும் சலிப்பேற்படாதவாறு கதையை ஆசிரியர் கூறிச் செல்கிறார். வேறு ஒன்றும் குறிப்பிடவேண்டியன இல்லை. விலை அணா எட்டு. ஆசிரியர் குயிலன். முத்தமிழ் நிலையம் சென்னை—1.

தமிழ் இசை மலர் 3. ★★

தமிழ் இசைபற்றிய கட்டுரைத் தொகுப்பு. சுவையான கட்டுரைகள் நிறைந்திருக்கின்றன. படித்தால் பயனுண்டு என்ற புத்தகவரிசையில் இதுவும்ஒன்று. விலை அணா 4. தமிழ் இசைச் சங்கம், சென்னை—1

தமிழ்த் தென்றல் ★★

(*1948* முத்தமிழ்ச் சித்திர மலர்)

தமிழ்நாட்டுத் தலைவர்களின் படங்களும், பழம்பாடல் விளக்கச் சித்திரங்களும், பல அறிஞர் கட்டுரைகளும் நிறைந்த தொகுப்பு. பட அமைப்பும் தொகுப்பு முறையும் பதினைந்து ஆண்டுகட்கு முந்தியது. முகப்புப் படமாகப் போட்டிருக்கும் தமிழ்த்தாயின் உருவம் தமிழனைக் கேலிசெய்வது போல் அமைந்திருக்கிறது. இல்லாதனவற்றிற்கெல்லாம் உருவம் கற்பிக்கும் பழக்கம் போனால் தான் தமிழன் உருவப்பட வழி பிறக்கும். நாவலர் பாரதியார் தமது கட்டுரையில் என்ன சொல்கிறார்என்றேபுரியவில்லை. தமிழ்த் தென்றல் அலுவலகம் கிழக் கடைத்தெரு, விருதுநகர்.

வரப்பெற்றோம்

நாக்குமேடை: கபிலன் தீட்டியது. விலை 2 அணா. குஞ்சரம் பதிப்பகம், திருமலைராயன்பட்டினம்.

வணிகர்மன்றம்: திங்கள் இதழ் ஆசிரியர் இராம. வெங்கடேசன் 18, நடுக் கல்லுக்காரத் தெரு, திருச்சி.

ரஸமணி.மாதமிருமுறை. ஆசிரியர் ஆர். வரதராசன். விலை ரூ. 0—1—6. 15, பெஸன்ட் ரோடு தல்லாகுளம், மதுரை.

ஒளி:மாதமிருமுறை. ஆசிரியர் கா. மு. ஷெரீப், விலை 2 அணா திருவாரூர்.

ரதி: மாதப்பத்திரிகை ஆசிரியர் கொ. வெ. ரா. ஆறுமுகன் விலை 4 அணா. 12/193 ஒப்பணக்கார வீதி, கோயம்புத்தூர்.

வானவில்: மாதமிருமுறை சிறுவர் பத்திரிகை. ஆசிரியர் மூர்த்தி. விலை 1 அணா. தெப்பக் குளம், திருச்சி.

சூறவளி:மாதமிருமுறை. விலை 0—1—3. ஆசிரியர்கள் கபிலன், சூறுவளி. திருமலைராயன்பட்டினம்.

ஈரோடுவாசி: முனிசிபல் தமிழ் வாரப பத்திரிகை. விலை ரூ, 0—0—6. ஆசிரியர் பி. சண்முக வேலாயுதன், 42, கச்சேரி வீதி, ஈரோடு.

தேவாரத் திருப்பதிகங்கள்: இராக, ஸ்வர, தாள அமைப்பு. விலை அணா எட்டு. ஆசிரியர் புதுவை ஆ. விநாயக முதலியார், முத்தமிழ் அச்சகம் இராஜ வீதி பெரிய காஞ்சிபுரம்.

—ரா. வேந்தரசன்

மலரும் புனலும்

மு. அண்ணாமலை

◎

"கவியரசர் பாரதிதாசன் எழுதிய எதிர்பாராத முத்தம் என்னும் சிறு காவியத்திற்கு அடுத்தாற்போல் வந்த சிறு காவியங்களிலே இது தலைசிறந்து விளங்குகிறது. சொல்லாட்சியும், கதையமைப்பும் உவமையழகும் எண்ணி எண்ணி இன்புறத் தக்கன" என்று பொன்னி ஆசிரியர் முருகு சுப்பிரமணியன் கூறுகிறார்.

◎

விலை அணா பத்து

◎

வெளியிட்டோர் :

செந்தமிழ்ப் பதிப்பகம்

புதுக்கோட்டை.



PRINTED BY AR. PERIYANNAN AT THE SENTHAMIZH PATHIPPAKAM,
EAST MAIN STREET, PUDUKKOTTAI.

'பொன்னி' வெளியீடுகள்

திருவள்ளுவரும் திராவிடக்கொள்கையும் 0—2—0

திருக்குறள் முனிசாமி

அந்நூலில் திருவள்ளுவர் வகுத்த திராவிடக்கொள்கைகளை வெளிப்படையாக அழகுற எடுத்துக் கூறுகிறார் ஆசிரியர். இதோ திராவிடர் பண்பாடு என்று வீரமுடன் எடுத்துக்காட்டும் அருமையான புத்தகம்.

தேய்ந்த விரல் 0—4—0

திருக்குறள் முனிசாமி

காதலியின் உள்ளத்தில் எத்தனை இரகசியங்கள் உள்ளன என்று வியந்து, கண்டறியாதன கண்டோம் என்று, படிக்கும் வாசகர்கள் ஒவ்வொருவரும் பேரின்பம் அடைகின்ற காதல் நூல்

வடலூரும் ஈரோடும் 0—4—0

திருக்குறள் முனிசாமி

சமய வாதியான வடலூர் இராமலிங்க அடிகள் சமயத்தை வெறுத்து எவ்வாறு ஈரோட்டுப் பெரியாரின் கொள்கைகளை அப்படி அப்படியே பல ஆண்டுகளுக்கு முன் கூறியிருக்கிறார் என்பதை விளக்கும் ஆராய்ச்சி நூல்

வள்ளுவரும் பெரியாரும் 0—8—0

திருக்குறள் முனிசாமி

பெரியாரின் அழகிய திருவுருவுடன் வெளிவந்திருக்கும் இந்நூலில், வள்ளுவர் வகுத்த தமிழ் நெறி, பெரியார் வாழ்வில் அமைந்திருப்பதை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறார் ஆசிரியர். வேகமான நடை. சிந்தனையைக் கிளறும் கருத்துக்கள். படித்து முடிந்ததும் பெரியார்தான் இன்றைய வள்ளுவர் என்ற எண்ணம் உள்ளத்தில் ஒலித்துக்கொண்டிருக்கும்.

ஈரோட்டுத் தாத்தா 0—4—0

நாரா. நாச்சியப்பன்

நெஞ்சை அள்ளும் இன்பத் தமிழில் பெரியாரின் வரலாற்று நிகழ்ச்சிகளைக் கவிதையாக்கித் தந்துள்ளார் தோழர் நாச்சியப்பன். வெறும் வரலாறாய் இல்லாமல் ஆங்காங்கே கற்பனை வளமும் அணிச்சிறப்பும் நூலை அழகு செய்கின்றன. பெரியாரைப் பாடும் முதல் கவிதை நூல் இதுதான்!

கோயில் பெருச்சாளிகள் 0—6—0

நீலவில்லாளன்

கோவிலிலே, காவற்காரன் முதல் காசு வாங்கும் பார்ப்பான் வரை, ஒவ்வொரு பெருச்சாளியும் செய்கின்ற ஆபாச லீலைகளைத் தனக்கென அமைந்த விறுவிறுப்பான தமிழில் அப்பட்டமாகக் காட்டுகிறார் ஆசிரியர்.

செந்தமிழ்ப் பதிப்பகம்

தபாற்பெட்டி 39 — புதுக்கோட்டை